
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



ஏரார்ந்த மயிலையிலே எழிலான மயிலேறிச்
சீரார்ந்த வளம்காட்டும் சிங்கார வடிவேலா!
நீராடி நெற்றியிலே நீறுடித் துன்பமுடன்
போராடி வருகின்றோம். புண்ணியனே! காத்திடுவாய்.

மார்ச் 1990

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9
ஒலி 2

சுக்ல
மாசி

மார்ச்
1990

நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
நினைப்பித்தால் ஏழை நினைப்பேன் — நினைப்பின்
மறப்பித்தால் யானும் மறப்பேன் எவையும்
பிறப்பித்தாய் என்னுலென் பேசு.
— இராமலிங்க சுவாமிகள் - திருவருட்பா

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

'திருத்தொண்டர்' வயிரவன் செட்டியார்

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு இரண்டாவது முறையாக நடைப் பயணம் மேற்கொண்டிருக்கும் குழுவிற்குத் தலைமை ஏற்றுச் செல்லும் பாக்கியம் பெற்றவர் 'திருத்தொண்டர்' ஆர். வயிரவன் செட்டியார் அவர்கள்.

தேவகோட்டை அ. ஆத. செ. வ. வகையைச் சேர்ந்த இராமநாதன் செட்டியார் - மீனாட்சி ஆச்சியின் நான்காவது பிள்ளை இவர்கள். இவர்களது பெயரே சொல்லும் இவர்கள், வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர்கள் என்று! 58 வயதைத் தாண்



திருத்தொண்டர் ஆர். வயிரவன்

டிய இவர்கள் அதில் 38 ஆண்டுகள் தேவகோட்டை நகரத்தார் மேல்நிலைப் பள்ளியில் எழுத்தராகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

தேவகோட்டையிலிருந்து திருச்செந்தூருக்கு 13 ஆண்டுகளாக 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்களுடன் அமைப்பாளராக இருந்து நடைப் பயணம் சென்று வந்திருக்கும் இவர்களுக்கு முதல் நடைப் பயணத்தின் போது 'காசிஸ்ரீ' அரு. சோ. அவர்கள் 'திருத்தொண்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்.

1969 ஆம் ஆண்டு முதல் பழநிக்கும் வழி நடைப் பயணம் சென்று வரும் இவர்கள், 13 ஆண்டுகளாக சபரிமலைக்கும் சென்று ஐயப்பனை வழிபட்டு வருகிறார்கள். இந்த ஆண்டு தம் துணைவியாரோடு அறுபடை வீடுகளுக்கும் நடைப் பயணமாகச் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

''1983 ஆம் ஆண்டு, முதன் முறையாக காசிக்கு வழிநடைப் பயணம் புறப்பட்ட குழுவில் கலந்து கொள்ள நான் விரும்பியும் பணியின் காரணமாக இயலவில்லை. ஆனால் இன்று இறை அருளாலும் பெரியவர்களின் ஆசியாலும் இரண்டாவது நடைப் பயணக் குழுவிற்குத் தலைமையேற்றுச் செல்லும் பேறு கிடைத்துள்ளது.'' என மகிழ்ந்து கூறிய அவர்கள், தம்மை ஆன்மீகத் துறையில் இவ்வளவு தூரத்திற்கு ஈடுபடச் செய்த பெருமை தம் மனைவியையும் 'காசிஸ்ரீ' அரு. சோ. அவர்களையும் சேரும் என அடக்கத்தோடு கூறினார்கள்.

திருத்தொண்டர் ஆர். வயிரவன் செட்டியார் அவர்களுக்கு வள்ளியம்மை ஆச்சி என்கிற மனைவியும் நான்கு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் உள்ளனர்.

வயிரவன் செட்டியார் அவர்களின் தலைமையிலான குழுவினரின் புனிதப் பயணம் இனிய பயணமாக - வெற்றிப் பயணமாக அமைய வாழ்த்துவோம்.

சந்திப்பு : சி. ஜம்புலிங்கம்
தேவகோட்டை

மதுரைக் கோயில் குடநீராட்டு விழாவில் கவியரங்கம்

மதுரையில் அமைந்து இருக்கும் ஸ்ரீ நடுவூர் நாயகி சமேத இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் குடநீராட்டு விழா 7-2-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. 1902 ஆம் ஆண்டில் இக்கோயிலில் அம்பாள் கோயில் திருப்பணியைச் செய்த குடும்பத்தைச் சேர்ந்த தேவகோட்டை தி. வகையைச் சேர்ந்த திரு. ராஜு திரு. பாலுவின் ஏற்பாட்டில் 6-2-90 அன்று 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ.வின் தலைமையில் கவியரங்கம் சிறப்பாகநடைபெற்றது. புலவர் மாமணி திரு. மா. முத்துராமன், திரு. சேது அருணாசலம் மூவர் திரு. சபா. அருணாசலம் திரு. துரைசாமி ஆகியோர் கவி பாடினர். திரு சு. பாண்டியன் கவியரங்கைத் தொடங்கி வைத்தார்.

பசியை அடக்கிய தோசை!

கடுமையான பசியோடு அவன் ஓர் உணவு விடுதிக்குள் நுழைந்தான். அங்கு ஐந்து இட்டலிகளைச் சாப்பிட்டான்; பசி அடங்கவில்லை. மேலும் ஐந்து இட்டலிகளை வாங்கி உண்டான்; பசி குறையவில்லை. இன்னும் ஐந்து இட்டலிகளை வரவழைத்துச் சாப்பிட்டான். அப்பொழுதும் பசி அடங்கவில்லை. பின்னர் ஒரு தோசையையும் வாங்கி உண்டான். இம்முறை பசி அடங்கிற்று.

'அடடா! நான் எவ்வளவு பெரிய முட்டாள்! பதினைந்து இட்டலிகளை வீணாக்கி விட்டேனே! முதலிலேயே ஒரு தோசை வாங்கிச் சாப்பிட்டிருந்தால் பசி அடங்கியிருக்குமே..!' என்று தன் தலையில் அடித்துக் கொண்டான்.

படித்து ரசித்தவர்;
தஞ்சை பழ. வள்ளியப்பன்

இராமேஸ்வரம் - காசி
இரண்டாம் நடைப் பயணம்!

1983 ஆம் ஆண்டில் திருச் செந்தூர்ப் பாதயாத்திரைக் குழு வின் சார்பில் 'பொற்கிழிக் கவிஞர்' 'காசிஸ்ரீ' அரு. சோம சுந்தரன் அவர்கள் தலைமையில் 13 பேர் கொண்ட குழு, முதன் முறையாக இராமேஸ்வரத்தி லிருந்து காசிக்கு (3200 கி. மீ, தொலைவு) நடைப் பயணம் புறப் பட்டு இனிதே காசியை அடைந்து வெற்றியோடு ஊர் திரும்பியது. இந்த நடைப் பயணம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக் காட்டு என்பதோடு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

இப்போது மீண்டும் 'காசிஸ்ரீ' அரு. சோ. அவர்கள் ஆலோசனை யில் தேவகோட்டை திருத் தொண்டர் திரு. ஆர் வயிரவன் அவர்கள் தலைமையில் 15 பேர் கொண்ட குழு இராமேஸ்வரத் திலிருந்து காசிக்கு இரண்டாம் நடைப் பயணத்தை மேற் கொள்ளவிருக்கிறது.

அமைப்பாளர் திருத்தொண் டர் திரு. ஆர். வயிரவன் அவர் களுடன் திருவாளர்கள் ஏஎல். தியாகராஜன், எம். பாலசுந்த ரம், மு மெ. ஆதீனமிளகி, முருகன் அடிமை மு வீரப்பன், பி. சாமிநாதபிள்ளை, என். நடராஜன், பி. வி. இராமகிருஷ் ணன், செ. நா. லெ. அருணா சலம் செட்டியார், முருகன் அடிமை ஏஆர். எஸ்எம். வெள்ளை யன், அருள்தொண்டர் ஆர்எம். நாராயணன், சி. சே. ராம. சேவுகப் பெருமாள், ஆர்எம். சுப்பையா, ஆர்எம். அருணாசலம் எம். வி. கணேசன் ஆகியோர் இந்த வழி நடைப் பயணத்தில் கலந்து கொள்கின்றனர்.

இவர்கள் 27-2-90 அன்று அதிகாலை 5-45 மணி அளவில் தேவகோட்டையிலிருந்து புறப் பட்டு உப்பூர் சென்று வெயிலு கந்த விநாயகரை வணங்கி தேவி பட்டனம் சென்று கடலில் நீராடி நவபாஷாணம் வணங்கி இரா மேஸ்வரம் புறப்படுகின்றனர். 28-2-90 புதன்கிழமை இரா மேஸ்வரத்தில் இராமர், லெட்சு மணர், சீதா தீர்த்தங்கள் ஆடி, கடல் நீராடி, 22 தீர்த்தங்களும் ஆடி கந்தமாதன பர்வதம் வழி பட்டு இராமநாத சுவாமியையும் பர்வதவர்த்தினி அம்மையும் வணங்கிக் கோடித் தீர்த்தமும் கடல் மணலும் சேகரித்துக் கொண்டு 1-3-90 வியாழக் கிழமை பகல் 12-30 மணி அள வில் இராமேஸ்வரம் கோயிலி லிருந்து காசிக்கு நடைப் பயணம் புறப்படுகின்றனர். இக்குழுவினர் தம்முடன் ஒரு சைக்கிள் ரிக்ஷா வையும் (மோட்டார் பொருத்தி யது) கொண்டு செல்கின்றனர்.

இவர்கள் தமிழ்நாடு, கர் நாடகம், ஆந்திரம், மகாராஷ்டி ரம், மத்தியப் பிரதேசம் உத்தி ரப் பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களில் — சுமார் நான்கு மாதங்களில் 3200 கி. மீ. தொலைவு நடைப் பயணம் மேற் கொண்டு 27-6-90 புதன் கிழமை காசியை அடைவர். இவர்களது பயணம் வெற்றிபெற ''நகரத் தார் குரல்'' வாழ்த்துகிறது.

திருமணம்

மகிபாலன்பட்டி மு. அழ. ராம. கருப்பன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகப்பனுக்கும் பூலாங்குறிச்சி மெ. மு, ராம. அழகப்ப செட்டி யார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் பூலாங்குறிச்சியில் 4-12-89 அன்று திருமணம் சிறப் பாக நடைபெற்றது.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—50—

''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை'' என்று ஒரு காலத்தில் ஆங்கிலேயர்கள் கூறினார்கள். உலகத்தின் பெரும்பகுதி, அவர்கள் ஆளுகைக்குள் இருந்தது. இன்று எல்லா நாடுகளையும் இழந்து பழம்பெருமை பேசி, ஓரளவு வறுமையுடன் சோம்பேறியாகக் காட்சியளிக்கிறார்கள். நேரடியாகப் பிச்சை கேட்காமல் இரயில் நிலையம் போன்ற இடங்களில் பிடில் வாசிக்கிறார்கள். சிலர் பணத்தை போட்டுச் செல்கின்றனர். சில ஆங்கிலேயர்கள், ''ஒரு பாட்டில் பீர் வாங்கித் தருகிறாயா, ஒரு பாக்கட் சிகரெட் வாங்கித் தருகிறாயா?'' என்று கேட்டு வாங்கிக் கொள்கின்றார்கள். நானும் இரண்டு மூன்று ஆங்கிலேயர்களுக்குத் தருமம் செய்தேன். டாக்டர்



பாரிஸ் நகரில் திரு. சுரேந்திரன், திரு. ஏஎல். பெரியகருப்பன், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், டாக்டர் திரு. எம். ஏ. சி எஸ். ராஜேந்திரன். திருமதி ராஜேந்திரன்.

ஜெயபிரகாஷும் "இப்படிச் செய்து கொண்டு வந்தால் அந்நியச்செலாவணி தீர்ந்துவிடுமே" என்றார். வெள்ளையர்களிடம் 200 ஆண்டுகள் அடிமை வாழ்க்கை வாழ்ந்து அவர்களை 'துரை, துரை' என்று அழைத்த நமக்கு இரண்டு மூன்று துரைகளுக்குத் தர்மம் செய்த ஆத்ம திருப்தி ஏற்படுமே என்று கொடுத்தேன்" என்று டாக்டரிடம் சொன்னேன்.

மதுரை டாக்டர் எம். ஏ. சி. எஸ். ராஜேந்திரன் அவர்கள், இருபத்திரண்டு ஆண்டுகளாக எனது இனிய நண்பர். டாக்டர் அவர்களை முதன் முதலில் எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் பனையபட்டி சுப. அ. நடராஜன் செட்டியாரவர்கள். டாக்டர் ராஜேந்திரன் நகரத்தார்களில் பலருக்கு நண்பராக இருக்கிறார். வணிகம், மருத்துவம், பொது வாழ்க்கை முதலிய எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அவருக்குத் தெரியாததே இல்லை என்று சொல்லலாம். ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைக்கிறார். சோம்பல் என்பதே கிடையாது. அவர் நேரத்தை வீணாக்குவதில்லை. திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவர். அன்பானவர், பண்பானவர். நான் பள்ளிக்குச் சென்று தெரிந்து கொண்டதைவிட அவரோடு பழகி, அவரிடமிருந்து கற்றுக் கொண்டவை அதிகம். ஆண்டவன் அருள் பாலிக்கிறான் என்பார்கள். இது போன்ற டாக்டர்கள் மூலமாகத்தான் ஆண்டவன் நம் துயரங்களைத் தீர்க்கிறான். நான் பல முறை ஆபத்துகளிலிருந்து நீங்கி இன்று ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கு டாக்டர் ராஜேந்திரன் அவர்கள் தான் காரணம் அவர்கள் குடும்பத்தவரும் எங்கள் குடும்பத்தவரும் சேர்ந்துதான் அமெரிக்க ஐரோப்பிய நாட்டுச் சுற்றுப் பயணத்தைமேற்கொண்டோம்.

இலண்டனிலிருந்து ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப் பார்க்க விமானம், கப்பல், இரயில், கார் மூலம் செல்லலாம். நாங்கள் இலண்டனில் வாடகைக்கு ஒரு வேனை எடுத்துக் கொண்டோம். அதற்கு 'மோட்டார் ஹோம்' என்று பெயர். மோட்டார் ஹோமில், வீடுபோல் எல்லா வசதிகளும் உள்ளன. இரயிலில் 'அப்பர் பெர்த்' போல் படுக்கை இருக்கிறது; குளியல் அறை; சமையல் செய்வதற்கு மின்சார அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி முதலிய எல்லா வசதிகளும் அந்த வேனில் உள்ளன. பகல் முழுவதும் காரில்

பயணம் செய்யலாம். ஒவ்வொரு ஊரிலும் இரண்டு, மூன்று ஏக்கர்களில் 'கேம்பிங் சென்டர்' என்ற அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த கேம்பிங் சென்டரில் ரெஸ்டாரண்டு, பாத்ரூம் முதலிய எல்லா வசதிகளும் உள்ளன. வாடகை கொடுத்து நமது வேனை 'பார்க்' செய்துகொண்டு மின்சாரத்தைப் பொருத்திக்கொண்டு வேனிலேயே சமைத்துச் சாப்பிடலாம். இரவில் வேனிலேயே படுத்துக் கொள்ளலாம். அதனால் ஹோட்டலில் ரூம் பிடிக்கும் செலவு மிச்சமாகிறது. இண்டர்நேஷனல் டிரைவிங் லைசென்ஸ் வைத்திருந்ததால் நாங்கள் எல்லோருமே ஒருவர் மாற்றி ஒருவர் கொஞ்சதூரம் வேனை ஓட்டுவோம். முதலில் இலண்டனை விட்டுப் பாரீசுக்குப் புறப்பட்டோம். இலண்டனிலிருந்து பாரீஸ் போகும்போது சிறிது நேரம் கடலைத் தாண்டவேண்டும். பெர்ரி என்று சொல்லப்படுகிற கப்பலில் காரை ஏற்றி கப்பல் மூலம் கடலைக் கடந்து பிறகு வானில் புறப்பட்டு பாரீஸ் போய்ச்சேர்ந்தோம். உலக மேப்பை வைத்துக் கொண்டு தான் ஒவ்வொரு ஊராகச் சென்று சுற்றிப் பார்க்க வேண்டும். பாரீஸில் ஆங்கிலம் தெரிந்தாலும் பேசமாட்டார்கள். டிக்ஷனரியை வைத்து சில பிரெஞ்சு வார்த்தைகளைச் சொல்லிப் பழகவேண்டும். ஒவ்வொரு நாட்டைக் கடக்கும்போதும் வங்கிக்குச் சென்று அந்தந்த நாட்டுச் செலவாணியை மாற்றிக்கொள்ள வேண்டும்.

(வளரும்)

கோனாபட்டு பள்ளிகளுக்கு நிர்வாகிகள் தேர்வு

கோனாபட்டு சரஸ்வதி உயர் நிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி ஆகியவைகளுக்கு கோனாபட்டு ஒலவக்கோடு ச. சுப்பையா செட்டியார் அவர்கள் தலைவராகவும் கோனாபட்டு இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் செயலாளராகவும் கோனாபட்டு சித. மெய்யப்ப செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

தெரிந்து கொள்ளுங்கள்

ஃ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தரிசு நிலங்கள் அதிகமாக உள்ளன,

ஃ பூமியைப்போல் 1313 மடங்கு பெரியது ஜூபிடர்.

ஃ ஆறுகளே இல்லாத நாடு சவுதி அரேபியா.

ஃ ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளாகும்.

ஃ இரயில்களே இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்.

ஃ இறைச்சியை விட வேர்க்கடலையில் புரதச் சத்து அதிகம்.

ஃ மூங்கில் ஒரு நாளில் மூன்று அடி கூட வளரும்.

ஃ சூரியன் கிரகம் அல்ல; அது ஒரு நட்சத்திரம்.

ஃ மின்சாரம் பாயச் செம்பை விட, வெள்ளி சிறந்தது.

ஃ பீமனும், துரியோதனனும் ஒரே நாளில் பிறந்தவர்கள்.

ஃ எறும்பு தன் எடையைப் போல 3 பங்கு எடையைத் தூக்கக் கூடியது.

— வி. ஆர். சின்ன அருணாசலம்
தேவகோட்டை

பிள்ளையார் நோன்பு

இவ்விரதம் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் அமர பட்சபிரதமை தொடங்கி மார்கழி மாதம் பூர்வபட்ச சஷ்டி திதியுடன் நிறைவாகிற 21நாள் விரதமாகும். நாள் ஒன்றுக்கு ஒரு இழை வீதம் 21இழைகளை எடுத்து ஒன்று சேர்த்து மஞ்சள் நீராட்டி விநாயகருக்கு அபிடேக அலங்காரங்கள் செய்து ஆடை சாத்தி மாலை சூட்டி ஆவரைக்குச்சியில் நெல் நாற்றும், கண்ணுப்பூ, கொன்றைப்பூ, ஆவரம்பூக்களும் வண்ணக் காய்களும் கட்டி விநாயகரின் வலப்பக்கம் வைத்து அவல், பொரி, கடலை, என்உருண்டை, மோதகம், தேங்காய், பழம், பச்சரிசி மாவில் தேன், சர்க்கரை, நெய், ஏலம், சுக்கும் சேர்த்து உருண்டை ஆக்கி நெய் வார்த்து 21 இழைகளைத் திரியாகப் போட்டு தீபம் ஏற்றி நிவேதனம் செய்து அத்தீபத்துடன் மாவிளக்கு மாவை உண்டு நோன்பை நிறைவு செய்து கொள்வார்கள். இதுதான் பிள்ளையார் நோன்பு.

நன்றி: கோட்டையூர் சிவன் கோவில் கும்பாபிடேக மலர்.

— ஆர் எம். வி. இராமசாமி

வடபழனி நகரத்தார் நற்பணி மன்றம் தொடக்க விழா

வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் தொடக்க விழா 31-12-89 அன்று சென்னை, அம்பத்தூர் நகரத்தார் சங்க முன்னாள் தலைவர் திரு. எம். எஸ் பி. அருணாசலம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இம்மன்றத்திற்கு திரு. எம் ஆர். சுப்பையா தலைவராகவும் திரு. எஸ். முத்து செயலாளராகவும், திரு. ஏ. கே. கிருஷ்ணன் பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். துவக்க விழாவில் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன் கலந்து கொண்டார்.

இப்படியும் ஒரு ஆசை!

கின்னஸ் புத்தகத்தில் தன் பெயர் இடம் பெற வேண்டும் என்பதற்காக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சார்லஸ்டிக்கன்ஸ் என்பவர் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டுக் காசு கொடுக்காமல் வந்ததற்காக 102 ஆவது முறையாகக் கைது செய்யப்பட்டாராம்!

மணியின் முணியான விளக்கம் !

வெண்ணெய் திருடித் தின்பது கண்ணனின் லீலைகளில் ஒன்று. இந்தத் தொல்லையைத் தாளமுடியாத கோபியர் கண்ணனைக் கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டமிட்டார்கள். எனவே வெண்ணெய் இருக்கும் உறியின் மேல் மணிகளைக் கட்டி வைத்தார்கள்.

வெண்ணெய் திருடி உண்ண ஒரு கோபியின் வீட்டில் நுழைந்தான், கண்ணன். அங்கு மணிகள் கட்டியிருப்பதைப் பார்த்தான்-புன்முறுவல் பூத்தான்-மணியை நோக்கி, ''ஏ மணியே!'' என்று அழைத்தான். கண்ணன் மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கு முன்னால் ''அடியேன்'' என்று இரு பொருள்படக் கூறியது, மணி.

மகிழ்ச்சியுடன் கண்ணன் கைநிறைய வெண்ணெய்யை அள்ளி எடுத்தான். மணி ஒலிக்கவில்லை. எடுத்த வெண்ணெய்யை வாயினுள் போட்டுச் சாப்பிடத் தொடங்கினான். 'கண கண' வென்று மணி ஒலித்தது. சப்தம் கேட்டுக் கோபியர் பலர் ஓடிவந்து கண்ணனைச் சூழ்ந்து கொண்டனர்.

''மணியே! 'அடியேன்' என்று கூறிவிட்டு நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா?'' என்று கேட்டான், கண்ணன்.

''மணிவண்ணா! நீ வெண்ணெய் எடுத்தபோது நான் ஒலித்தேனா? உண்ணும் போதல்லவா ஒலித்தேன். ஆண்டவனின் நிவேதனத்தின்போது ஒலிக்காமல் இருந்தால் என் கடமையிலிருந்து நான் தவறியவனாக அல்லவா ஆகிவிடுவேன்?'' என்று பதிலளித்தது, மணி.

மணியின் பதிலைக் கேட்டு மாயவன் மெய் உருகினான். கோபியர் கைகூப்பிக் கண்கலங்கினர்.

— சிவ. வசந்த், புதுக்கோட்டை.

திருமணம்

மதகுபட்டி திரு. ஏஎல். வெங்கிடாசலத்தின் (செயலாளர், ஹைதராபாத் - செகந்தராபாத் நகரத்தார் சங்கம்) புதல்வி செல்வி கண்ணாத்தாள் என்ற வள்ளியம்மைக்கும் நாட்டரசன் கோட்டை திரு. கண. க. ராம. வீரப்ப செட்டியார் புதல்வன் செல்வன் கண்ணப்பன் B.B.A.க்கும் மதகுபட்டியில் 7-2-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணம்

காரைக்குடி மெ. செ. ச. மு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. மெய்யப்பனின் மகளுமாகிய செல்வி வள்ளியம்மைக்கும் பள்ளத்தூர் சொ. மு. அ. மெ. மெய்யப்ப செட்டியார் பேரனும் திரு. சோலையப்பனின் மகனுமாகிய செல்வன் மெய்யப்பனுக்கும் 8-2-90 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இராமேஸ்வரம் - காசி நடைப் பயணம்: கடைசிச் செய்தி!

இராமேஸ்வரம் - காசி இரண்டாம் நடைப் பயணத்தில் 15 பேர் கொண்ட குழு புறப்பட்டுச் செல்வதாக இந்த இதழில் 4ஆம் பக்கம் செய்தி வெளியிட்டிருக்கிறோம்.

இப்போது அக்குழுவில் மேலும் மூவர் சேர்ந்து நடைப் பயணம் மேற்கொள்வதாக ஆலோசகர் 'காசிஸ்ரீ' அரு. சோ. அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த மூவர்: 1. திரு. வி. இராமநாதன் 2. திரு. ச. காமாட்சி சுந்தரம் 3 திரு ஆர் எம். என். கோவிந்தன் செட்டியார் (மதுரை நகர விடுதியின் மேலாளர்)

திருத்தொண்டர் ஆ. வயிரவன் அவர்கள் தலைமையில் செல்லும் இக்குழுவினர் தமது புனிதப் பயணத்தை வெற்றியோடு முடித்துத் திரும்ப வாழ்த்துகிறோம்.

கண்ணதாசன் பற்றி சாவி

''நான் ''தினமணி கதிர்'' ஆசிரியராக இருந்தபோது கவிஞர் கண்ணதாசனை 'அர்த்தமுள்ள இந்து மதம்' தொடரை எழுத வைத்தேன். இந்தத் தொடரைப் பாராட்டிய காஞ்சிப் பெரியவர் கண்ணதாசனுக்குப் பொன்னாடை போர்த்தி ருத்ராட்ச மாலை வழங்கினார். கண்ணதாசன் சினிமாப் பாடல்கள் மூலம் எத்தனையோ இலட்சங்களைச் சம்பாதித்திருக்கலாம். ஆனால் ''தினமணி கதி''ரில் தொடராக வந்த 'அர்த்தமுள்ள இந்து மதம்'தான் காஞ்சிப் பெரியவரின் பாராட்டை அவருக்குப் பெற்றுத் தந்தது.''

— சாவி

(கவிஞர் வைரமுத்துவின் ஒலிப் பேழை வெளியீட்டு விழாவில்

பிறப்பும் இறப்பும்!

ஓர் உயிர் உடம்பெடுத்துப் பிறப்பதைப் 'பிறப்பு' என்றும் அவ்வுயிர் அவ்வுடம்பை விட்டுப் பிரிதலை 'இறப்பு' என்றும் நாம் கூறுகிறோம்.

தமிழில் 'ப்' என்னும் மெய்யெழுத்துடன் 'இ' என்னும் உயிர் எழுத்துச் சேரும்போது (ப்+இ) 'பிறப்பு' என்ற சொல் பிறக்கிறது. அதுபோல் அதே 'இ' என்ற உயிர் (எழுத்து) 'ப்' என்னும் உடலை விட்டுப் பிரிய 'இறப்பு' என்று எழுதுகிறோம்.

உயிர் நிலையானது; உடம்பு நிலையில்லாதது!

வாழ்வியலில் நாம் காணும் பிறப்பு, இறப்பு என்னும் நிகழ்ச்சிகளைத் தமிழ் தன் புணர்ச்சியியலிலேயே காட்டுகிறது.

— முத்தமிழ்மணி கதி. சுந்தரம்

(மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் அண்மையில் நடந்த மகிபாலன்பட்டி சி. இராம. இராமசாமிச் செட்டியார் நினைவுச் சொற்பொழிவில்)

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

3. பகட்டும் வீண் செலவும்

நகரத்தார்களிடம் அருமையான தமிழ்ச் சொற்கள் வழக்கிலுள்ளன என்று கூறி, கவியரசர் கண்ணதாசன் 'திருத்தம்' என்ற சொல்லைப் பற்றி விவரிப்பார். "பெண் அழகாயிருக்கிறாள், சிவப்பாய் இருக்கிறாள்'' என்பதை விடத் 'திருத்தமாய்' இருக்கிறாள் என்று கூறுவார்கள். சிற்பம் போல, உறுப்பு ஒவ்வொன்றும் அளவாய் அமைந்து மிகத்திருத்தமாக இருப்பதே, உண்மையான அழகாகும். சிவப்பாயிருந்து, கட்டமைப்பான உடலின்மையால் அழகின்றி இருப்பவர் பலராவர். பொருள்களைக் கூட திருத்தமாய்ப் பார்த்து வாங்குவார்கள். கொஞ்சம் கூடக் கோணல்மாணலாயிருந்தால், அதைக் கடையில் திரும்பக் கொடுத்து மாற்றிவிடுவார்கள். சரி, அது போகட்டும். நான் இங்கே சொல்ல வந்தது, 'திருத்தம்' போல, நகரத்தார்களிடையே பரவலாக வழங்கும் பிறிதொரு வட்டார வழக்குச் சொல் பகட்டு என்பது. மற்ற சமுகத்தவர் அதிகம் 'பகட்டுவ'தில்லை. செட்டியவீட்டு ஆச்சிதான் நான்கு பேருக்குத் தெரியப் பகட்ட வேண்டும் என்று ஆசைப்படுவாள். எதிரி சிறு வயிரத்தோடு ஒன்றை புதுமாதிரியாகப் போட்டிருந்தால், தன்னிடம் பெரியதே இருந்தாலும், அந்த மாதிரியும் ஒன்றை வாங்கிப் போட்டுக்

காட்ட ஆசைப்படுவாள். அதாவது 'பகட்டுவது,' பிற சமூகத்திலும் காணப்பட்டாலும், நகரத்தார் சமூகத்தில் அது மிகஅதிகம். அதுபோல, 'பகட்டு' என்ற சொல்லை இவர்கள் தான் அதிகம் பயன்படுத்தி, காலகாலமாய்ப் பகட்டி வருகிறார்கள். திருத்தம் திருத்தம் என்று அலைவதுகூட சில சமயம் பகட்டுவதன் காரணமாகவே ஆகும்.

பகட்டுதல் - விளம்பரப் படுத்துதல்; வீண் கௌரவம் பாராட்டுதல், பலரறியத் தங்கள் செல்வச் செருக்கை மிகைப்படுத்திக் காட்டுதல், இருப்பதைப் பகட்டுவதை விட இல்லாததையும் மறைத்துப் பகட்டிப் பிறர் புகழ வாழ நினைத்தல். இந்தப் பகட்டுதலால் ஏற்படும் வீண் செலவுகளைக் கணக்கு எடுத்தால், இந்தச் சமூகம் சிக்கனம் உடையதென்பதை விட, வீண் செலவுகளைக் கொட்டுவது என்பதே பொருத்தமான முடிவாகும். ஒரே ஓர் உதாரணம் காட்டுவேன்; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு போதாதா, பதம் பார்க்க?

'மாப்பிள்ளைப் பலகாரம்' என்று திருமணத்திற்குப் பிறகு இந்தக் காலத்திலும் வாங்கு

தாலாட்டு

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ
சூடாமணியே! துலக்கமாய் நின்றொளிரும்
வாடாமலரே, என் மரகதமே கண்வளராய்
கற்கண்டு சீனி கனிவகைகள் எல்லாம் உன்
சொற்கேட்டு நானடையும் சுகத்தினுக்கோ ஈடாமோ
பழுதிலா ஆடல்கள் பற்பல நான் கண்டிடினும்
எழுதாத சித்திரமே என் இன்பம் உன் செயலே
கால்களை நீட்டி நன்கு கையைத் தலைக்கு வைத்துப்
பாற்கடலிற் பள்ளிகொண்ட பத்மநாபன் நீதானோ!
"தர்மம் குறைகையிலே தாரணியில் நானுதித்தல்
கரமம்" என உரைத்த கண்ணபிரான் நீதானோ!
சத்தியத்தைக் காப்பாற்றும் தருமவான் காந்தியைப் போல்
உத்தமனே நீயுதித்தாய் உலகிற் சிறப்படைவாய்
காசியினில் கொல்லாமை கருணைமிக்க செய்கையென்ற
ஆசியத்துச் சோதி அருமைப் புத்தர்நீ தானோ!
யான்பெற்ற நற்குமரா இனிமை மழலையினால்
தேனொத்த செந்தமிழில் தினைமாவும் சேர்த்தனையோ!
முத்தம் நீ தந்தெனக்கு மூடியிரு கண்களையும்
அத்தனையின் பங்களையும் அகம்புத்தி விட்டனையே!
அப்பா பெயரோங்க அம்மா உளங்குளிர
இப்பாரில் நீ நடந்து இன்ப வாழ் வெய்திடுவாய்.

("மலரும் உள்ளம்" என்ற நூலிலிருந்து)

('குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவு நாளை (16-3-90) ஒட்டி, அவர்கள் இயற்றிய இத்தாலாட்டுப் பாடல் வெளியிடப் பெறுகிறது.)

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பருக்கு அஞ்சலி

கொல்லங்குடி உடையப்பா.

அழுது துடிக்குஞ் சிறுகுழந்தை
அழுகை மறந்து தான்சிரிக்க
ஒழுகும் தேனுய்க் கவியெழுதி
உலகம் மகிழ வாழ்ந்திருந்தார்.

அழுதே உலகம் தேம்புகையில்
யாரும் இன்றித் தேற்றுதற்குப்
பழுதில் வாழ்வைத் தான்முடித்துப்
பறந்து விட்டார் பரமனடி.

என்றும் கூடிக் குழந்தைகள்
இசைக்கும் பாட்டின் ஒலியலையில்
ஒன்றி நின்றே வள்ளியப்பர்
உலகில் நிலைப்பார் நித்தமுமே.

கிறோமே, அது தேவைதானா? 501 முறுக்கும், 301 அதிரசமும் இவை போல்வனவும் கூடவே பணமும் தேவையா? 'மாப்பிள்ளைப் பலகாரம்' என்ற வார்த்தையை நம்பி, மாப்பிள்ளையே 501 முறுக்கையும் தின்றால், அவர் என்ன ஆவார்? நாடு என்ன ஆகும்? சரி, அதை வாங்கி ஊர் முழுதும் - உற்றார் உறவினருக்கெல்லாம் பங்கு வைக்கிறோமே? இஃது அவசிய-மா? சிலபோது, கடிக்க வராமல் செய்தவரைக் கேலி செய்தும், பங்கு வைத்தவரைக் கேலி செய்தும் தங்களுக்குள் பேசி, சர்ச்சைகள் கிளம்புவதுண்டு.

அது மட்டுமன்று, ''எனக்கு என் சம்பந்தியாள் ஏழு சுற்று முறுக்குத்தான் தந்தாள்; என் நாத்தனார்க்கு அவள் சம்பந்தியாச்சி ஒன்பது சுற்று முறுக்குத் தந்து விட்டாள்'' என்று உயிரை விடுகிறோமே, அது நல்லதா? சுற்றுக் கூடக் கூடப் பெருமையாம். சாதாரணமாக, எண்ணெயில் வேகவைக்கும் உளுந்தாலான இதைச் செய்வதற்கே, பணம் தேடுகிறவனுக்குத் தலை சுற்றுகிறது! இந்தப் பெண்கள் சுற்றுக்களின் எண்ணிக்கை பற்றிப் பேசி, போலிக் கௌரவம் கொண்டாடுகிறார்கள்!

எனக்குத் தெரிந்த முதல்வர், பேராசிரியர் ஒருவர் முதன்முதல் சம்பந்தியான புதிதில், மகள் வீட்டுக்கு மாப்பிள்ளைப் பலகாரம் கொண்டு போனாராம். அதில் 501 முறுக்கு அடங்கிய தகரமும் இருந்தது. புறப்படும் போதே, அவர் மனைவி ''காரில் அப்படி இப்படி நீங்கள் அசைந்து விழ நேர்ந்தாலும் கம்பியைப் பிடித்துக் கொண்டு, இந்த முறுக்குத் தகரத்தை அசையாமல் கொண்டுபோங்கள். முறுக்கு நல்ல அரிசியில், பொறுக்குப் பொறுக்கென்று தின்பதற்கு மென்மையாக இருக்கிறது. உடைந்து நொறுங்கிவிட்டால் சம்பந்தி ஆச்சி நம்மைச் சும்மா விடமாட்டாள். அடுத்தமுறை நம் மகள் இங்கு வரும்போது கண்ணீரைக் கசக்கும்படி ஆகி

விடும். பத்திரம், பத்திரம்'' என்று எச்சரிக்கை செய்தே அனுப்பினாராம்.

சம்பந்தி ஆச்சி அதேபோல, பலகார வகைகளை உள்ளே கொண்டு போனவர், அவசர மாக வெளியே வந்து ''என்ன முறுக்கெல்லாம் உடைந்து, நொறுங்கிக் கிடக்கிறது'' என்றா ராம். எவ்வளவு கவனமாகப் போனாலும் மேலேயுள்ள நாலைந்து முறுக்குகள் கூடவா உடையாமல் இருக்கும்? முதல் வருக்குக் கோபம் வந்துவிட்டது. ''அப்படியா? எத்தனை என்று எண்ணிச் சொல்லுங்கள். உடனே போய்த் திரும்பவும் நல்லதாகப் பொறுக்கி எடுத்து வருகிறேன்'' என்று கூறவே, அந்த ஆச்சி அமைதியடைந்தாராம்.

இதுபோல நூறு உதாரணம் காட்ட முடியும். இவை எல்லாம் இந்தச் சமுகம் பகட்டுவதற்காக என்றே பணத்தை விரையம் செய்யும் இனம் என்பதை மெய்ப்பிக்கும். திருமண வீட்டில் காலையில் பலகாரம் அவசியம் தான். அதற்காகத் திருமணம் பேசும்போதே, மணநாள் அன்று ஐந்து பலகாரமா, ஏழு பலகார -மா, ஒன்பது பலகாரமா என்று பேசி, முடிவு செய்து, அவ்வாறே தயாரிக்கிறோமே இஃது அவசிய -மா?

மூத்த கொழுந்தனார் மகன் திருமணத்தில் பெண்ணைப் பெற்றவர்கள், பல செலவுக ளோடு ஏழு பலகாரமும் போட வீட்டை விற்றுப் போட்டிருந் தால், இந்த ஆச்சி அதைவிடப் பகட்டுவதற்காக - ஏனென்றால் கொழுந்தனார்க்குத் திருச்சியில் தான் கடை, இந்த வீட்டாருக் குக் கோலாலம்பூர்க் கடை; கொழுந்தனார் மகன் வெறும் பிஎஸ் சி. தான்; இவர்கள் பையன் எஞ்சினியர். அதனால் ஒன்பது பலகாரம் கேட்டு, வற்புறுத்தி, காலை 6 மணிக்கே, தாட்டிலையில் ஒன்பது பல காரங்களைப் பெண்ணைப் பெற்ற வர்களை அடுக்க வைத்து. அவர் களைக் கண்ணைக் கசக்க வைக்கிறாளே, இது சிக்கனமா? நெஞ்சில் கைவைத்துப் பதில் சொல்லுங்கள். இது முதல் கேள்வி தான்..?

(வளரும்)

டாக்டர் கண்ணப்பனுக்கு கமல்பத்ரா விருது !

அகில இந்திய ஜேசீஸ் சங்கம் இவ்வாண்டு முதல் 'கமல் பத்ரா' எனும் உயரிய விருதினை அறி முகப்படுத்தியுள்ளது. ஜேசீஸ் உறுப்பினராக உள்ள ஒருவர், ஜேசீஸ் இயக்கத்தில் அவர் பெற்ற தனி மனித மேம்பாட்டுப் பயிற்சிகளாலும் அவர் தம் திற மையாலும் அவர் தொழிலில் புரிந்துள்ள சாதனைகள், ஆற்றி வரும் நற்பணிகள் குறித்து நடு வர்கள் குழுவில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டு இந்த விருது வழங்கப் பெறுகிறது.

மதுரை சென்ட்ரல் ஜேசீஸ் சங்கம் 1989-90 க்கு 'சாதனை புரிந்த இளைஞர்' என்ற, வகை யில் டாக்டர் என். என் கண் ணப்பனுக்கு 'கமல் பத்ரா' விருது வழங்கப்பரிந்துரை செய்து அனுப்பியது. 20-1-90 & 21-1-90ல் சேலத்தில் நடந்த 138 ஜேசி சங்கங்கள் கலந்து கொண்ட ஜேசீஸ் கருத்தரங்கு மாநாட்டில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். ராமலிங்கம் முன்னிலையில் தமி ழக ஜேசீஸ் தலைவர் திரு. ஆர். ரகுநாதன் 'கமல் பத்ரா' விரு தினை டாக்டர் திரு. என். என். கண்ணப்பனுக்கு வழங்கினார்.

காரை தந்த கற்பகம் சா. கணேசனார்

அரசியல் வித்தகர், ஆராய்ச்சியாளர், சிற்பக்கலை வல்லுநர், தேச பக்தர்.. இன்னபிற சிறப்புக்களைப் பெற்ற, காரை தந்த கற்பகம், காலஞ்சென்ற கம்பன் அடிப்பொடி சா. கணேசனார் அவர்களைப் பற்றிச் செய்திகளைச் சேகரித்து ஒரு கட்டுரை எழுத வேண்டுமென பல மாதங்களாக எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் இப்போது நிறைவேறியுள்ளது.

சா. கணேசனார் அவர்களின் மாப்பிள்ளை திரு. பழ. சண்முகம் செட்டியார் அவர்களைக் காரைக்குடியில் சந்தித்து நேர்முகம் கண்டபோது அவர்கள் கம்பன் அடிப்பொடி அவர்களைப் பற்றி ஏராளமான செய்திகளை அன்புடனும் ஆர்வத்துடனும் தெரிவித்தார்கள்.

சந்திப்புத் தொடங்குகிறது..

தந்தையார்


''கம்பன் அடிப்பொடி அவர்களின் தந்தையார் பற்றிச் சொல்லலாமா? ...''

''கம்பன் அடிப்பொடி அவர்களின் தந்தையார் முரு. வீர. சாமிநாதன் செட்டியார். இவர்கள் காரைக்குடி பஞ்சாயத்து யூனியன் தலைவராகச் சேவை செய்தவர்கள். பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த இவர்கள் பிள்ளையார்பட்டிக் கோவிலுக்கு ராஜகோபுரம் எழுப்பியவர்கள். இவர்கள் 1935ல் காலமானார்கள்.''


அரசியல் ஈடுபாடு

''கம்பன் அடிப்பொடி அவர்களின் தொடக்க கால வாழ்க்கை, அரசியல் ஈடுபாடு ஆகியவற்றில் நீங்கள் அறிந்ததைச் சொல்லுங்களேன்....?''

''1927 ல் காந்தியடிகள் இந்த வீட்டுக்கு (கற்பக நிலையம்) வந்தார்கள். அவருக்குப் பணியாற்றும் தொண்டர் படைத் தலைவனாக சா. க. அவர்கள்



கம்பன் அடிப்பொடி அவர்களும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும். புத்தனேரியில் எடுத்த படம் இது.



படத்தில் அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, பா. இராமசாமி,

நிற்போர்: திருவாளர்கள் செல்லப்பா, கம்பன் அடிப்பொடி, வே. சோமையா (புதுவயல்)

பொறுப்பேற்ருர்கள். அதன் பிறகு சா. க. அவர்கள் காங்கிரஸில் சேர்ந்தார்கள். 1936க்குப் பிறகு தேசியத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார்கள். 1936ல் தமிழ் நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி மாநாடு நடந்தது. அதற்கு காந்தி மேஜை தலைவர்; இராய. சொ. துணைத் தலைவர்; கம்பன் அடிப்பொடி வரவேற்புச் செயலாளர். ராவ்பகதூர், திவான் பகதூர், சர் பட்டங்களை (பிரிட்டிஷ் அரசு அளித்தவை) துறக்காதவர்களுக்குக் காங்கிரஸில் பதவி ஏதும் அளிக்கக்கூடாது என அப்போது தீர்மானம் கொண்டு வந்தார்கள் தீர்மானத்தை இராஜாஜி அவர்கள் எதிர்த்தும் அது வெற்றி பெற்றது.''

தனி நபர் சத்தியாக்கிரகம்

''1941ல் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து காந்தியடிகள் தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினர்கள். அப்போது சா. க. அவர்கள் காரைக்குடி மகார் நோன்புத் திடலில் சத்தியாக்கிரகம் நடத்தி காரைக்குடியிலிருந்து சென்னைக்கு நடந்து சென்ற போது கைதாகி நான்கு மாதங்கள் அலிபுரம் (உத்தரப் பிரதேசம்) சிறையில் இருந்தார்கள்.''

ஆகஸ்ட் இயக்கம்

''1942ல் ஆகஸ்ட் இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு பெரும் துன்பத்திற்கு ஆளானுர்கள். பல மாவட்டங்களுக்கும் சென்று போராட்டத் தீயை ஊக்குவித்தார்கள். அப்போது போலீஸார் இவர்களது வீட்டுப் பொருட்களைச் சூறையாடினுர்கள். ஆயிரக்கணக்கில் சேதம் ஏற்பட்டது. அப்போது சா. க. அவர்கள் ஓராண்டு தலைமறைவாக இருந்து மாறு வேடத்தில் ரேக்ளா வண்டியில் சென்னை சென்ருர்கள். மெ. நா. சித. சிதம்பரம் செட்டியார், எம். என். எம். மெய்யப்பன், பஞ்சாயத்துப் புலி கி. நாராயணன்

செட்டியார் போன்ற அவர்களது நண்பர்கள் போலீசாரால் துன்புறுத்தப்படுவது அறிந்து கண்ணீர் சிந்தி இராஜாஜி அவர்களின் ஆலோசனையின் பேரில் சென்னை போலீஸ் கமிஷனரிடம் சரணடைந்தார்கள். அதில் 18 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்கள்.''


''1946ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவிக்குக் காமராஜரை எதிர்த்து சா. க. அவர்கள் போட்டியிட்டார்கள். அதில் 19 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றார்கள்.''

தேவர் பிரச்சாரம்


''1957ல் காரைக்குடித் தொகுதியில் ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டார்கள். சா. க. அவர்களுக்கு ஆதரவாகப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மூன்று நாட்கள் தேர்தல் பிரசாரம் செய்தார்கள். அதில் 1700 வாக்குகள் வித்தியாசத்தில் சா. க. அவர்கள் தோல்வியுற்றார்கள்.''

சட்டமன்ற உறுப்பினர்

''1960ல் இராஜாஜி அவர்கள் அழைப்பின் பேரில் சுதந்திரா கட்சியில் சா. க. அவர்கள் சேர்ந்து தமிழ்நாடு சுதந்திராக் கட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை செய்திருக்கிறார்கள். 1962 முதல் 1967 வரை தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகவும் 1968 முதல் 1974 வரை மேலவை உறுப்பினராகவும் (M.L.C.) சேவை செய்திருக்கிறார்கள்.''



1957ல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அழைப்பின் பேரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் குன்றக்குடி சென்றபோது எடுத்த படம். படத்தில் (இடமிருந்து வலமாக) திரு. சசிவர்ணத்தேவர், திரு. முத்துராமலிங்கத் தேவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கம்பன் அடிப்பொடி, திரு. எம். எஸ்பி. சண்முகம்.



காரை தந்த கற்பகம் கம்பன் அடிப்பொடி அவர்களும் கவியரசர் கண்ணதாசன் அவர்களும்.

கம்பன் கழகம்

''சா. க. அவர்கள் தொடங்கியுள்ள கம்பன் கழகம் பற்றிச் சொல்லலாமா?''

''கம்ப இராமாயணத்தில் சா. க. அவர்களுக்குத் தெரியாத விஷயம் எதுவுமில்லே. கம்பன் மேல் கொண்ட பற்றுக் காரணமாக 1938ல் கம்பன் கழகத்தை நிறுவினுர்கள். கம்பன் கழகம் இப்போது 47 ஊர்களில் இயங்கி வருகிறது. கம்பன் கழகம் தொடங்க பிஸ்ரீ ஆச்சாரியாரும் டி. கே. சிதம்பரநாத முதலியாரும் காரணகர்த்தாக்கள் ஆவர். கம்பன் அறநிலேயின் தலேவராக இப்போது தொழிலதிபர் திரு. ஜி. கே. சுந்தரம் இருந்து வருகிருர்கள். திரு. க. கு. கோதண்டராமன் துணேத் தலேவராகவும் திரு. மு. மெ. முத்துராமன், திரு. பழ. பழநியப்பன் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் திரு. ச. கம்பராமன் துணேச் செயலாளராகவும் திரு. ஏ திருநாவுக்கரசு பொருளாளராகவும் மற்றும் 9 பேர் உறுப்பினர்களாகவும் இருந்து வருகின்றனர். மலேஷியாவில் உள்ள திரு. வெங்கா அவர்கள் இப்போது கம்பன் அறநிலேக்கு மிகப் பெரிய உதவிகளேச் செய்து வருகிருர்கள்.''

கம்பன் மணி மண்டபம்

''1970ல் சா. க. அவர்களின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா காரைக்குடியில் நடைபெற்றது. அப்போது அவர்களுக்கு அளிககப் பெற்ற ஒரு இலட்சம் ரூபாய் நிதியைக் கொண்டு அவர்கள் கம்பன் மணி மண்டபத்தைக் கட்டத் தொடங்கினுர்கள். கம்பன் மணி மண்டபம் கட்ட கானுடு காத்தான் திரு. சி. வி. சிடி. வெங்கடாசலம் செட்டியார் திரு. ஜி. கே. சுந்தரம் போன்ற பலர் நிதி உதவி செய்து ஊக்குவித்தார்கள். அதன்பின் சா. க.

அவர்கள் அரசியல் ஈடுபாட்டைத் துறந்து கம்பனுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.''

கம்பன் அடிப்பொடி பட்டம்

''சா. க. அவர்களுக்கு 'கம்பன் அடிப்பொடி' என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?''

''1970ல் சா. க. அவர்களின் மணிவிழாவின்போது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ் மகாராஜன் பொதுமக்கள் சார்பில் 'கம்பன் அடிப்பொடி' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார்கள்.''

வேறு செய்திகள்

''கம்பன் அடிப்பொடி அவர்களைப் பற்றி குறிப்பிடத்தக்க வேறு செய்திகள் ஏதாவது..?''

''சா. க. அவர்கள் நேரத்தைப் பொன்னாக மதிப்பவர்கள். விழாவிற்குத் தலைமை தாங்குபவர்கள் பெரிய மனிதராக இருந்தாலும் நேரத்திற்கு விழாவிற்கு வரவில்லையென்றால் அவர்களை எதிர்பார்க்காமல் விழாவைத் தொடங்கி விடும் பழக்கமுடையவர்கள். இது பற்றித் தமிழக முதல்வர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ''ஆட்களுக்காக நிகழ்ச்சிகள் என்று இல்லாமல் நிகழ்ச்சிகளுக்காக ஆட்கள் என்று காலம் தவறாது விழாவைக் கணேசனார் நடத்துவதை நான் போற்றிப் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கல் வெட்டு ஆராய்ச்சியிலும் இலக்கிய ஆராய்ச்சியிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள். இலக்கிய மேடையை பட்டி மண்டபம் ஆக்கிய பெருமைக்குரியவர்கள்''

''சிற்பக் கலையை வளர்க்கும் விதமாக 1966ல் சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வந்தார்



காரைக்குடியில் நடைபெற்ற அரசியல் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த திரு. எம். ஜி. ஆரோடு கம்பன் அடிப்பொடி அவர்கள்.

கள்.''

''சிங்கப்பூரில் ஒரு படிமம் மாரியம்மன் சிலையா, திரௌபதி சிலையா அல்லது வேறு வடிவமா என்பதில் சர்ச்சை ஏற்பட்டது. அதற்காக சிங்கப்பூர் அரசின் அழைப்பின் பேரில் சா. க. அவர் களைத் தமிழக அரசு அனுப்பி வைத்தது. இரு சாராரும் சா. க. அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்கள்.''

குடும்பம்

கம்பன் அடிப்பொடி சா. கணேசனுர் அவர்களுக்கு மங்கை யர்க்கரசி ஆச்சி என்ற மகள் இருக்கிறர். திரு. பழ. சண்முகம் செட்டியார் - மங்கையர்க்கரசி ஆச்சி தம்பதியருக்கு திரு. ச. கண்ணன் திரு. ச. கம்பராமன் என இரு புதல்வர்களும் வாசுகி, கண்ணகி B.Sc. (Zoology) என இரு புதல்விகளும் உள்ளனர். சா. க. அவர்களுக்கு உள்ளூரில் திரு. சுவாமிநாதன் B. M E. என்கிற பையனைச் சுவீகாரம் செய்து பேத்தி கண்ணகியைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறர்கள். சா. க. அவர்களின் பேரனுக்கு 'கணேசன்' எனப் பெயர். பழ. சண்முகம் செட்டியார் அவர்களை நேர் முகம் கண்டபோது தேவை யான விவரங்களை, படங்களை எடுத்துக் கொடுத்த திருமதி கண்ணகி சுவாமிநாதனின் சுறு சுறுப்பும் குணமும் என்னை வெகு வாகக் கவர்ந்தன.

சந்திப்பு : எல். சுந்தரம்

குழந்தை வளர்ப்பு

கடுமையான விமரிசனங்களோடு வளர்க்கப்படும் குழந்தை
எதையும் மட்டம் தட்டி, ஒதுக்கக் கற்றுக் கொள்கிறான்;

நையாண்டி செய்து வளர்க்கப்படும் குழந்தை
எதைக் கண்டும் வெட்கி ஒதுங்கத் தொடங்குகிறன்

அவமான உணர்ச்சியோடு வளர்க்கப்படும் குழந்தை
குற்ற உணர்வுகளுக்கு அடிமையாகிப் போகிறான்;

பொறுப்போடு வளர்க்கப்படும் குழந்தை
நிதானத்தோடு இருக்கிறான்;

சரியான தூண்டுகோலோடு வளர்க்கப்படும் குழந்தை
தன்னம்பிககையோடு திகழ்கிறான்;

நியாய உணர்வோடு வளர்க்கப்படும் குழந்தை
நேர்மையைக் கடைப்பிடிக்கிறான்;

பாதுகாப்போடு வளர்க்கப்படும் குழந்தை
மற்றவர்களை நம்பிப் பழகுகிறான்;

தட்டிக்கொடுத்து வளர்க்கப்படும் குழந்தை
தன்னையே புரிந்து கொண்டவனுக வளர்க்கப்படும் இருக்கிறான்.

அன்பு, பாசம், நட்பு ஆகியவற்றின் பொருள் புரிந்து வளர்க்கப்படும் குழந்தை உண்மையான அன்பு காட்டவும் பதிலுக்கு, அதைப்பெறவும் தெரிந்து கொள்வதால் ஆயுள் முழுவதும் நிம்மதியாக இருக்கும் வழியை உணர்ந்து கொள்கிறான்.

தொகுப்பு : அண. அண்ணுமலை

தேங்காய் படைக்கப்படுவதன் காரணம் என்ன?

அமெரிக்கப் பாதிரியாரின் மகனாக 1936 ஆம் ஆண்டு பிறந்து, கோடைக்கானலில் கல்வி கற்ற பிரட் டபிள்யூ குளோதி என்னும் அமெரிக்க இளைஞர் தமிழ்ப் புராணங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக, குறிப்பாக முருகப் பெருமானின் வழிபாடு பற்றிய வழி வழியான மரபுகளை ஆராய்வதற்காக தமிழ் நாட்டில் ஓராண்டு தங்கியிருந்தார்.

கோவில்களிலும் திருமணங்களிலும் தேங்காய் படைக்கப்படுவதன் காரணம் ஏன் என்பதை அவர் விளக்கியது சுவையாக இருந்தது.

தேங்காய் மனிதனை உருவகப்படுத்தும் சின்னம் ஆகும். அதற்கு மூன்று கண்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு பொய்க் கண்கள்; ஒன்றுதான் மெய். அதைப் போன்றே எல்லா மனிதர்களுக்கும் மூன்று கண்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு ஊனக் கண்களும், மனிதன் பயன்படுத்தினால் மாபெரும் உண்மையின் ஆழத்தில் ஊடுருவும் மெய்யான ஒரு ஞானக் கண்ணும் உண்டு. மனிதனின் திடமற்ற சித்தத்தைப் போன்று தேங்காயின் சிரட்டை உள்ளது. எனவே முழு இனிமையான தேங்காய்ப் பருப்பு வெளிப்பட தேங்காயை உடைப்பது போன்று, மனிதன் தன் உண்மைத் தன்மையைக் காட்ட உடைபட வேண்டும்.

''மனிதன் இக்கூட்டை உடைத்தால்தான் தேங்காய்த் தண்ணீரைப் போல், தெளிந்த ஆத்மாவானது மெய்மையைக் காண முடியும். புலனறிவிற்கு அப்பாற்பட்ட எல்லையற்ற பரம் பொருளோடு இயைய முடியும்'' என்று திரு. குளோதி கூறினார்.

ஆதாரம்: சுதேசமித்திரன் dt 21-12-1966

— மேலைச்சிவபுரி முத்துராமன், திருச்சூர்


கூட்டு வழிபாடும் கவியரங்கமும்

பழம்நீ பாதயாத்திரைக் குழு சார்பாக 6-1-90 அன்று மாலை மதுரை நகர விடுதியில் கூட்டு வழிபாடு நடைபெற்றது. டாக்டர் எம் ஆர். முத்தையா அவர்கள் குத்து விளக்கு ஏற்றிவைக்க, டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் அவர்கள் தொடக்க உரையாற்ற திரு. சொ. சொ. மீ. சுந்தரமும் திரு. கேஆர். முத்தையா செட்டியாரும் சிறப்புரை ஆற்றினர். திருவாளர்கள் ஆர். வயிரவன், சொக்கலிங்கம், காசிநாதன் ஆகியோர் பக்திப் பாடல்களைப் பாடினர்.

கடுமையான மழை காரணமாக 7-1-90 அன்று நடைபெற விருந்த பழம்நீ கவியரங்கம் ரத்துச் செய்யப்பட்டு 21-1-90 ஞாயிறன்று திருவள்ளுவர் கழகத்தில் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் முன்னிலையில் தமிழாகரர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் இறைவணக்கம் பாட தொழிலதிபர் சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொடக்க உரையாற்ற கவிஞர்கள் கதி. சுந்தரம், பெரி. சிவனடியான், கு. செ. இராமசாமி, சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் கவிபாடி மகிழ்வித்தனர்.

இவ்விழாவில் பழம்நீ கவியரங்க அமைப்பாளர் திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம், பல பெரியோர்களால், சான்றோர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றார்.

இவ்விழாவில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. அருளாடியார் திரு. சுப. பழநியப்ப செட்டியார் நினைவாக அஞ்சலிக்கவிதை படித்தார்



மணிவண்ணன் மடல்..

3. பெண்களே, பெண் இனத்தை மதிக்க வேண்டும்

அன்புள்ள ஆச்சிக்கு,

ஆங்கிலேயரின் ஆட்சி அகன்ற பிறகும் நமக்கு அடிமை எண்ணம் அகலவில்லை. இரண்டு நாட்களுக்குமுன், ''இந்து'' ஆங்கில நாளிதழில், படித்த அறிஞர் ஒருவர் எழுதியிருந்த கட்டுரையைப் படித்தேன். கல்லூரிப் படிப்பிற்கு ஆங்கிலந்தான் உகந்தது என்று அவர் எழுதியிருந்தார். ஆங்கிலேயர் போய் நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அவர் இப்படி எழுதுகிறார் என்றால், நமது அடிமை எண்ணம் அகலவில்லை என்றுதானே தெரிகிறது? கல்லூரிக் கல்வி இருக்கட்டும்; இளங் குழந்தைகளையும் ஆங்கிலப் பள்ளியில் சேர்த்து, அவர்கள் 'மம்மி', 'டாடி' என்று அழைப்பதைத்தானே இன்றைய பெற்றோர் விரும்புகின்றனர்?

அது ஒருபுறம் நிற்க, சென்ற கடிதத்தை நான் விட்ட இடத்தில் தொடர்கிறேன். சென்ற வாரம் வலையபட்டி நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். நெருக்கமானவர் என்பதால் குடும்பச் செய்தி எல்லாம் எழுதுவார். உணவிற்குச் சிரமப் படுவதாக எழுதிவிட்டு, மனைவியைப் பற்றி, 'திருநெலை ஆத்தாள் வீட்டுக்குப் போயிருக்கு. அது திரும்பிவர ஒரு வாரம் ஆகும்' என்று குறிப்பிட்டிருந்தார். ஏதோ, ஆடு மாடுகளைச் சொல்வதுபோல், மனைவியை, 'அது', 'போயிருக்கு' என்று எழுதுகின்றார். விசாரித்தபோது, அது அந்தப் பக்கத்துப் பழக்கம் என்றார்கள்!

அந்தணர் வீடுகளில் பெண்களை, 'அடீ', 'வாடி' என்று ஏவுவதைக் கேட்டிருக்கிறேன்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நம் ராஜாசர் முத்தையாச் செட்டியார் அவர்கள், தம் மனைவியை, ''வாங்க, இருங்க'' என்று எப்பொழுதும், உயர்வாகத்தான் அழைப்பார்கள். பிறரிடமும் ஆச்சியை, 'அவர்கள்' என்றுதான் குறிப்பிடுவார்கள்.

பொதுவாகவே, நகரத்தாரிடம் பழைய நாளிலிருந்து காணப்படும் பழக்கம், பண்பாடு, ''நம்ம பொம்பிளைக பழனிக்குப் போயிருக்காக'' என்பது போல உயர்வாகப் பேசுவதுதான். இல்லறத்தில் கணவனும் மனைவியும் சமமானவர்கள் என்பதால், நம் முன்னோர்கள் இவ்வழக்கத்தைக் கைக்கொண்டார்கள்.

வீட்டில் பெண்கள் செய்யும் பணி, இரண்டாம் தரமான மூன்றாம் தரமான பணி அல்ல. 'மனைக்கு விளக்கம் மடவார்' என்றதற்கு ஏற்ப, தமது அறிவையும் பண்புகளையும் கொண்டு வீட்டை, வீட்டு வாழ்வை அழகு பெறச் செய்பவர்கள் பெண்கள். அந்த மனைமாட்சி அவர்களுக்கு மட்டுமே உண்டு. நல்ல உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுப்பதும், அவற்றின் சத்துப்பொருளும், உண்போரின் உடல் நலமும் கெடாமல் சமைப்பது, அன்புடன் உணவு அளிப்பது - இவற்றை இப்படி வேலைக்காரர் செய்யமாட்டார்கள். பெண்கள் இவற்றை நாள்தோறும், வேளை தவறாமல் செய்வது ஒரு புறம்.

குழந்தை வளர்ப்பு, மக்களின் கல்வியைக் கவனித்தல், கோபமில்லாமல், குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் கற்பித்தல், நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பித்தல் - இவை ஒரு புறம்.

வீட்டைப் பாங்காக வைத்திருப்பது, வரவுக்கு ஏற்பச் செலவு இனங்களைத் திட்டமிடுதல், விருந்தினரை உபசரித்தல், பொருள்களைப் பாதுகாத்தல், மகன், மகள் திருமணம் ஆகியிருந்தால், அவர்களுக்குச் செய்யும் கடமைகள் - இவை ஒரு புறம், இவ்வளவையும் குடும்பத்தில் 'மனைவி' என்பவள் செய்கிறாள். பொறுமையாக, முறையாகச் செய்கிறாள். மனையியல், பொருளாதாரம், விஞ்ஞானம், வரலாறு, இலக்கியம் முதலிய துறைகளைப் படித்த பெண்கள் இந்தக் கடமைகளை இன்னும் நன்றாகச் செய்ய முடியும். அவர்கள் உத்தியோகமும் செய்து சம்பாதிக்கலாம். அதனால்தான் நம் நகரத்தார் பெண்கள் அனைவரும் படிக்க வேண்டும் என்று கூறுகின்றேன்.

பெண்கள் வீட்டுக் கடமைகளை அறிவோடு செய்கிறார்கள். அதைவிட முக்கியம், பண்போடு செய்கிறார்கள் என்பது. இதில் அவர்களுக்கு மாற்று (பதில் ஆள்) கிடையாது. பொறுமை, அன்பு, பரிவு, அடக்கம், மன்னித்தல் முதலிய நல்ல பண்புகள் மிகச் சாதாரணமாகப் பெண்களிடம் இருப்பதால், குடும்பங்கள் சீராக நடக்கின்றன. குழந்தைகள் செம்மையாக வளர்கின்றன. ஏன்? கணவன்மார்களின் செயல் முறைகள் கூடத் திருந்துகின்றன. வீட்டில் மனைவியும், தாயும், ஆசிரியையும், வழிகாட்டியுமாக விளங்குபவள் பெண். அவள் இல்லையென்றால்தான் தெரியும் அவளது அருமை!

இத்தகைய பெண்களை வேலைக்காரி போலக் கருதுவதும், நடத்துவதும் தவறாகும். பெரியவர்கள் - தந்தையோ, மாமனாரோ, மாமியாரோ - பெண்களை அப்படி நடத்தினால், அங்கு வளரும் பிள்ளைகளின் மனத்தில் பெண்களைப் பற்றி எப்படி உயர்ந்த எண்ணம் உண்டாகும்?

கோவில் வாசலில், குழாயடி

யில், ரேஷன் கடையில், சினிமா 'கியூவில்' - நமது நகரத்தார் பெண்கள் - 40 வயதைத் தாண்டியவர்கள்- பெரும்பாலும் வீட்டு மருமகள்மார்களைத் தாழ்த்தியும், கேலியாகவும், குறைசொல்லியும் பேசுகிறார்கள். கல்யாணம் செய்யும் வயதுடைய மகனைப் பெற்ற தாயின் 'அந்தஸ்து' உயர்ந்துதான் நிற்கிறது, அந்தப் பேச்சில். ஆனால் பெண்ணைப் பெற்றுக் கல்யாணம் செய்துகொடுத்த தாய், தாழ்வாகப் பேசப்படுகிறாள். ஏதோ, சீர் 'செனத்தி,' முறைகளை சரியாகச் செய்யவில்லை என்று இளக்கமாகப் பேசப்படுகிறாள். கல்யாண வயதுடைய மகன்களைப் பெற்ற தாய்களின் 'ஷேர் மார்க்கெட்' இத்தகைய பொதுவிடங்கள் தாம். அங்குப் பேசிப் பேசியே, விலைவாசி ஏறுவது போல் 'வரதட்சிணை' ஏறிக் கொண்டே போகின்றது.

இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது, ஒன்று புரிகிறது. நமது இனத்தில் பெண்களே பெண்களின் நிலையைக் குறைக்கிறார்கள். பணங்காசை வைத்துத் தராதரத்தை எடைபோடுகிறார்கள். மருமகளின் பண்பை வைத்து அல்ல, அவள் கொண்டுவந்த வரதட்சிணையை வைத்து, அவளை நடத்துகிறார்கள்.

நம் இனத்தில் பெண்கள் முன்னேற வேண்டுமானால், முதலில் பெண்களே, பெண் இனத்தை மதிக்க வேண்டும். அப்போதுதான் ஆண்களும் மதிப்பார்கள்.

அன்புள்ள

மணிவண்ணன்

(வளரும்)

நகரத்தார் புத்தக வங்கி: அறிவிப்பு

மதுரை நகரத்தார் புத்தக வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து 10-2-90 வரை 43 நாட்களில் 1272முறை புத்தகங்களை வழங்கி உள்ளது எனவும் வருகிற பொதுத் தேர்வுக்கு புத்தகங்கள் பெற விரும்புவோர் 29-4-90 க்குள் பெற்று 24-6-90க்குள் திரும்பக் கொடுக்கலாம் எனவும் அதன் செயலாளர்களில் ஒருவரான திரு. சண்முகசுந்தரம் அறிவித்துள்ளார்.

பயிற்சி வகுப்புகள்

நகரத்தார் புத்தக வங்கி நகரத்தார் ஆசிரியர்களைக் கொண்டு நகரத்தார் மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டாகப் பயிற்சி வகுப்புகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. பிளஸ் டூ தேர்வு எழுதிய மாணவர்களுக்கு M.B B.S, B.E, B.Sc (Agri), B. Pharm ஆகிய பாடங்களில் நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. இதில் திறமையான, அனுபவமிக்க நகரத்தார் ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். இதில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் திரு. பழ. இராமசாமி, 23, 1 வது புதுத் தெரு, செல்லூர் மதுரை-625002 (தொலைபேசி: 41970) என்ற முகவரியில் அணுகும்படி கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

மடாலயங்கள், நகரக் கோயில்கள் சுற்றுலா

நகரத்தார் புத்தக வங்கியின் உறுப்பினர்களும் இளைஞர்களுமாக 60 பேர் கோவிலூர், பாதரக்குடி, துலாவூர் ஆகிய மூன்று மடாலங்களுக்கும் ஒன்பது நகரக் கோவில்களுக்கும் திரு. பழ. இராமசாமி தலைமையில் ஒரு நாள் தெய்வீகச் சுற்றுலா சென்று வந்தனர். இளைஞர்கள், குழுவாக வந்தமைக் கண்டு மகிழ்ந்து கோவிலூர் சுவாமிகள் ரூ. 1000-க்கு புத்தகங்கள் வாங்கித் தருவதாக அறிவித்திருப்பதாக திட்ட இயக்குநர் திரு. அழ. குமரப்பன் தெரிவித்துள்ளார்.

செட்டி நாட்டு ஊர்களுக்கு சைக்கிள் பேரணி


நம்மவர்கள் வாழ்ந்து வரும் செட்டிநாட்டில் உள்ள 75 ஊர்களுக்கும் நகரத்தார் இளைஞர்கள் சமூகப்பணி நிறைந்த ஒரு வார சைக்கிள் பேரணியை மே மாத இறுதியில் மேற்கொள்ள உள்ளனர். இதில் முழுமையாக-வோ அல்லது ஒருசில நாட்களோ கலந்து கொள்ள விரும்பும் ஆர்வம் உள்ளவர்கள் ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ 29-4-90க்குள் கீழ்க்கண்ட முகவரியில் தங்கள் பெயரை அதற்குரிய விண்ணப்பத்துடன் பதிவு செய்து கொள்ள வேண்டுமாறு வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி கேட்டுக் கொண்டிருக்கிறார். முகவரி: திரு. பழ. இராமசாமி, 23, 1வது புதுத் தெரு, செல்லூர், மதுரை - 625 002. (போன் : 41970)

59ஆவது ஆண்டு நிறைவு விழா

நாட்டரசன்கோட்டை வீர. சொ. லெ. கண்ணப்ப செட்டியார் - கண்ணாத்தாள் ஆச்சியின் 59ஆவது ஆண்டு நிறைவு விழா கர்நாடக மாநிலம் ஷிமோகாவில் சிறப்பாக நடைபெற்றது

குழந்தைக் கவிஞர் : சில செய்திகள்!

ஃ குழந்தைக் கவிஞர் தம் பொறுப்பில் இருந்த பத்திரிகைகளில் நீண்ட தொடர்கதையோ, தொடர் காவியமோ எழுதிக் கொள்ளவில்லை. ஆனல் மற்ற பத்திரிகை ஆசிரியர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களின் பத்திரிகைகளில் எழுதினர்கள். அவைகளில் குறிப்பிடத்தக்கவை: ''கரும்பு'' வார இதழில் எழுதிய காந்திக் கதைப் பாடல்கள்; ''தினமணி கதிர்'' வார இதழில் எழுதிய மணிக்கு மணி; ''கல்கி'' இதழில் எழுதிய பர்மா ரமணி ஆகியவை.



ஃ குழந்தைக் கவிஞர் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் பெற்றவுடன் அவரை அழைத்துப் பாராட்டு விழா நடத்தியது - அவர் கல்வி பயின்ற இராயவரம் சு. கதி. காந்தி பாடசாலை.

ஃ குழந்தைக் கவிஞரின் பள்ளித் தோழர்களில் ஒருவர் ரங்கநாதன் என்பவர். இப்போது சிறந்த சிந்தனையாளராகவும் சிறந்த சமயச் சான்றோராகவும் விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தான் அந்த ரங்கநாதன்.

ஃ அழ. வள்ளியப்பா அவர்கள் மதுரை முதலியார், இளவழகனர், டாக்டர் மா. இராசமாணிக்கனர் ஆகியோரிடம் சில காலம் தமிழ் பயின்றுர்கள்.

ஃ வள்ளியப்பா அவர்கள் தமது 13ஆவது வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினர்கள். 23 குழந்தைப் பாடல்கள் இடம் பெற்ற ''மலரும்உள்ளம்'' நூலே வள்ளியப்பா அவர்கள் எழுதிய முதல் நூலாகும்.

ஃ குழந்தைக் கவிஞர் 1941ல் இந்தியன் வங்கியில் சேர்ந்து படிப் படியாகப் பதவி உயர்வு பெற்று 30-11-1982ல் ஓய்வு பெற்றுர்கள்.

ஃ 1950ல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்து குழந்தை இலக்கியத்தை வளர்த்தவர்கள்.

ஃ வள்ளியப்பா அவர்கள் பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல், தமிழ்ப் பேரவைச் செம்மல் ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

ஃ இவர்கள் எழுதிய ''நம் நதிகள்'' என்னும் தென்னட்டு ஆறுகள் பற்றிய நூலை தேசியமொழிப் புத்தக டிரஸ்ட் 14 இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது.

ஃ தமது 12 ஆவது வயதில் நண்பர்களுடன் சேர்ந்து இராயவரத்தில் எட்டயபுரம் கவி பாரதிக்குச் சங்கம் கண்டவர் குழந்தைக் கவிஞர்.

ஃ குழந்தைக் கவிஞர் மதுரைக்கு வரும்போதெல்லாம் மீனுட்சி அம்மனை வழிபட்டுச் செல்வது வழக்கம். அப்படியே ''நகரத்தார் குரல்'' அலுவலகம் வருவார்கள். அப்படி வந்தபோது ஒருமுறை ''விசேடம் எதுவும் உண்டா?''

என்று கேட்டபோது ''விசேடம் எதுவும் இல்லை. அங்கே தெரிசித்தாகி விட்டது. இங்கே தெரிசிக்க வந்தேன்'' என்று கல கலவென சிரித்துக் கொண்டே கூறினர்கள்.

ஃ வள்ளியப்பா அவர்கள் ''நகரத்தார் குரல்'' இதழ் மீது மிகுந்த பற்றுடையவர்கள். இதழ் சிறப்பாக இருப்பதாகவும் முக்கிய புள்ளிகளின் சந்திப்புக் கட்டுரைகள் பயனுள்ளதாக இருப்பதாகவும் அடிக்கடி சொல்வார்கள். தமது துணைவியார் மற்ற இதழ்களை விட ''நகரத்தார் குர''லை ஆவலுடன் விரும்பிப் படிப்பதாகவும் கூறுவார்கள்.

— "எல்லெஸ்"

குழந்தைக் கவிஞரின் கடிதம்

'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள் எனக்கு அவ்வப்போது கடிதம் எழுதுவார்கள். ஒருமுறை 27-3-85 தேதியிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தில், கடிதம் எழுத தமக்குத் தாமதம் ஏற்பட்டது ஏன் என்பதை விளக்கியிருந்தார்கள்.

''மதுரையில் தங்களைச் சந்தித்த நான், இரவே திடீரென சென்னை திரும்ப நேரிட்டது காரணம் என் கொழுந்தியாள் மகன் வெங்கடாசலம் என்ற 32 வயதுப் பையன் இருதய ஆபரேஷனில் காலமாகிவிட்டான். வந்தது முதல் பல தொல்லைகள்; பல வேலைகள். அவனுக்கு ஒரு வயதாக இருக்கும்போதே அவன் தந்தை இறந்து விட்டார். அதுமுதல் நானும் என் மனைவியும் அவனை வளர்த்து ஆளாக்க முயன்றோம். விதி சதி செய்து விட்டது''

— இவ்வாறு அவர்கள் அக்கடிதத்தில் உருக்கமாக எழுதியிருந்தார்கள்.

— எல். சுந்தரம்

ரஸ்தா, சாலை ஆனது

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் 1937 ஆம் ஆண்டில் தேவகோட்டைக்கென ஒரு இரயில் நிலையம் அமைக்கப் பெற்றபோது, அதற்கு ''தேவகோட்டை ரஸ்தா'' என்று பெயரிடப் பெற்றது. தமிழக ஆட்சியாளரும் சரி, தமிழ்ப்பற்றுக் கொண்ட ஊர்ப் பெருமக்களும் சரி, இதுவரை, ''ரஸ்தா'' என்ற இந்திப் பெயரைத் தமிழில் எழுதியிருப்பது பற்றிக் கவனத்தில் கொண்டதாகவோ கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை.

இப்போது நல்லிதயம் கொண்ட பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. ஆ. இளங்கோவன், I. A. S. அவர்கள், அரும்பாடுபட்டு, ''தேவகோட்டை ரஸ்தா'' என்ற இந்திப் பெயரை ''தேவகோட்டை சாலை'' என மாற்றம் செய்யப்பெற வேண்டுமென்று தென்னக இரயில்வே மேலிடத்திற்கு வேண்டுகோள் விடுத்ததை, இரயில்வே நிருவாகம் கனிவுடன் பரிசீலித்து, ஆட்சித் தலைவரின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு தூய தமிழில் ''தேவகோட்டை சாலை'' என்று உடனடியாக மாற்றியமைத்து உத்தரவிட்டதுடன், இரயில் நிலையப்பெயர்ப் பலகையிலும் தக்க மாற்றம் செய்யப் பெற்று விட்டது.

இதற்காக நாம், பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ. இளங்கோவன் அவர்கட்கும் தென்னக இரயில்வே நிருவாகத்திற்கும் தேவகோட்டை சார் மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தேவகோட்டை
மெ. மெய்யப்பன், சென்னை

ஆதாரம்: ''தமிழரசு''

மங்கலமாவது நீறு

'மந்திரமாவது நீறு' என்று தொடங்கி திருநீற்றின் பெருமைகளை விளக்கிப் பாடினுர் திருஞான சம்பந்தர். முடியாண்ட மன்னரும் ஓர் நாள் பிடி சாம்பல் ஆவர்; மனித தேகம் இறுதியில் அடையும் நிலை சாம்பல்; இதை உணர்த்தத்தான் சைவர்கள் திருநீறு அணிகிருர்கள் என்பர் சிலர். அநித்யத்தைக் குறிப்பது தான் திருநீறு என்பார் சிலர். ஆனுல் நம் நகரத்தார்கள் திருநீற்றை மங்கலப் பொருளாகவே கருதினுர்கள். நம் நகரத்தார் திருமணங்களின்போது திருமாங்கல்யத்தில் முதலில் திருநீறு இட்டு அதன் பின் மஞ்சள் குங்குமம் இடுவார்கள். பிற சமூகத்தினர் திருமாங்கல்யத்தில் திருநீறு இடுவதில்லை; மஞ்சள் குங்குமம் மட்டுமே இடுவார்கள். நம் இனத் திருமணங்களில் மணமக்கள் வீட்டுக்குள் வரும்பொழுது சிலேட்டு விளக்கு வைத்து ஆரத்தி எடுத்து திருநீறு இடுவார்கள். ஒவ்வொரு சடங்குகளின்போதும் மணமக்களுக்கு திருநீறு இடப் பெறுகிறது.

திருநீறு அழிந்துவிட்டால் உடனே பூசிக் கொள்வதற்காக அக்காலத்தில் நம் முன்னோர்கள் எப்பொழுதும் திருநீற்றுப் பையை மடியில் வைத்திருப்பார்கள். வெளிநாடு பயணம் செய்யும் பொழுதும் வழிக்குத் துணையாக இந்த திருநீற்றுப் பையைக் கொண்டு செல்வார்கள். 'நீறில்லா நெற்றிபாழ்' என்பதை உணர்ந்து திருநீறு இட்டுக் கொள்வதைத் தலையாய கடமையாகக் கொண்டிருந்தார்கள். திருநீற்றைக் குழைத்து மூன்று விரல்களால் நெற்றியில் இட வேண்டும். மனம், வாக்கு, காயம் ஆகியவற்ருல் நாம் தூய்மையாகவும் பிறருக்குத் தீங்கு செய்யாமலும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் மூன்று வரிகளாக திருநீற்றை இட்டுக் கொள்கிருேம்.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்

காரைக்குடி.

ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு

பள்ளத்தூர் எம். ஏ. பழநியப்ப செட்டியார் அவர்கள் குடும்பத்தாரின் உதவியுடனும் மத்திய, மாநில அரசு நிதி உதவியோடும் அமராவதிபுதூரில் இயங்கிவரும் ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தில் நேபாளித் தறியில் நெய்தல், ராட்டையில் நூற்றல், பார் சோப்பு தயாரித்தல், எண்ணெய் எடுத்தல், அப்பளம் தயாரித்தல், தீப்பெட்டி உற்பத்தி செய்தல், அச்சு எழுத்துக் கோர்த்தல், அச்சடித்தல் போன்ற பல்வேறு விதமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளில் மேலும் பெண்களை அமர்த்திப் பயிற்சி கொடுக்க விரும்புவதாகவும் உயர் நிலைப் பள்ளி வரை படித்து மேற்படிப்புக்குச் செல்ல இயலாத கன்னிமார்களுக்கும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் அங்கம் பழுதடைந்தவர்களுக்கும் பால்ய விதவைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் இலவச உணவும் தங்குமிடமும் கொடுத்து ஓராண்டுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் மேற்படி ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தின் செயலாளர் திரு. பழ. லெ. பழநியப்ப செட்டியார் அறிவித்திருக்கிறார்.

பயிற்சியில் பங்குபெற விரும்பும் பெண்கள் தம்முடைய பெயர், தந்தை அல்லது கணவர் பெயர், குடும்ப வருமானம், வயது, படிப்பு உடன்பிறந்தோர், முகவரி ஆகிய விவரங்களுடன் விண்ணப்பம் எழுதி அதன் கீழே பெற்றோர் அல்லது காப்பாளர் சம்மதத்துடனும் உள்ளூர் பிரமுகர் இருவரின் பரிந்துரையுடனும் அனுப்ப வேண்டுமெனவும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகுதி உள்ளவர்களைத் தேர்வு செய்வதாகவும் அவர்கள் கூறினார்கள்.


சேவாச்ரமத்தின் முகவரி :-
செயலாளர்
ஸ்ரீ சாரதா சேவாச்ரமம்
அமராவதிபுதூர்-623 301

சிதம்பரத்தில் பாராட்டு விழா

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தில் 12-1-90 அன்று மதுரை வங்கித் தலைவர் சுப. சபாபதி அவர்கட்குப் பாராட்டு விழா நடைபெற்றது சிதம்பரம் நகரத்தார் சங்கப் புரவலரும், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தருமான டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார்கள். சங்கத் தலைவர் முனைவர் திரு. ச. மெய்யப்பன் வரவேற்றார். அரசு வழக்கறிஞர் திரு. அரு. லெட்சுமணன் மதுரை வங்கி முதன்மை அலுவலர் திரு. லெ. சிங்காரம் செட்டியார், முனைவர் திரு. அண. ஆண்டியப்பன், விழுப்புரம் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. லெட்சுமணன் செட்டியார் ஆகியோர் பாராட்டிப் பேசினர். செயலாளர் திரு. அரு. இராமநாதன் நன்றி கூறினார்.

திருமணம்

நாட்டரசன்கோட்டை சுப. ராம. லெ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி விஜயலெட்சுமி B. Sc. க்கும் கண்டனூர் அ. க. அ. மு. சித. முத்தையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் B. Com. க்கும் நாட்டரசன்கோட்டையில் 7-2-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ ''செட்டி நாடு'' இதழின் முன்னாள் இணை ஆசிரியர் திரு. மேனா அன்புமணி எழுதிய ''வாழ்க்கைக்கு வளம் தரும் அதிர்ஷ்ட எண்கள்'' என்ற நூல் 26-1-90 அன்று உமா பதிப்பகம் திரு. இராம. இலக்குவனால் சென்னை பவளக்காரத் தெரு பழைய தெண்டாயுதபாணி கோயில் வீட்டில் விசேட பூஜைகளுடன் வெளியிடப் பெற்றது.

ஃ இந்துமத ஆலயங்களைப் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற நெல்லையைச் சேர்ந்த சாந்திநிகேதன் பேராசிரியர் திரு. சுப்பையா ''நகரத்தாரும் வங்கி இயல் முறையும்'' என்ற தலைப்பில், முனைவர் பட்டம்பெற ஆய்வு செய்து வருகிறார்.

ஃ மதுரை தமிழிசைச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு விழா, ராஜா முத்தையா மன்றத்தில் 21-2-90 மாலையில் நடைபெற்றது.

ஃ கும்பகோணம் நகரத்தார் சங்கத்தின் சார்பாக மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதிக்கு 25-2-90 அன்று கும்பகோணத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் உபயமாக திருச்சி மலைக் கோட்டை தாயுமானவர் கோவிலில் 8-2-90 அன்று தைப்பூச விழா நடைபெற்றது.

ஃ காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் 23 ஆவது ஆண்டுவிழா 22-2-90, 23-2-90 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றன. இக்கல்லூரி நிறுவனரின் தாயார் பெயரால் அமைந்துள்ள மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற்பொழிவினை திரு. பே. ஞானசேகரன் 'சித்தர்கள்' எனும் தலைப்பில் 21-2-90 முதல் 23-2-90 வரை மூன்று நாட்கள் நிகழ்த்தினார்கள்.

ஃ வலையபட்டி, சிதம்பரம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 14 ஆவது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் 12-2-90 அன்று வலையபட்டியில் நிகழ்ந்தன.

ஃ காந்தியடிகளைப் பின்பற்றி சட்டை போடாமல் இருந்தவர்கள் நால்வர். அவர்கள்: 1. கம்பன் அடிப்பொடி 2. புலுசுசாம்பமூர்த்தி 3. சர்தார் வேதரத்தினம் 4. என். எஸ். வரதாச்சாரி.

ஃ கம்பன் அடிப்பொடி சா. கணேசனார் அவர்கள் பிள்ளையார்பட்டி தல வரலாறு, ராஜராஜன் (கல்வெட்டு ஆராய்ச்சி), தமிழ்த் திருமணம் ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

ஃ பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சத்தேவரது 115ஆவது பிறந்ததினத்தை தேவகோட்டை ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலயம் 17-2-90 அன்று காலை விசேட பூஜை, ஆராதனை நடத்திக் கொண்டாடியது.

வயதானவரின் கோபம்!

பேருந்து ஓடிக் கொண்டிருந்தது. பெண்கள் இருக்கையில் வயதான ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அடுத்த நிறுத்தத்தில் ஒரு பெண் பேருந்தில் ஏறியதால், அவர் எழுந்து இடத்தைக் கொடுக்க முயன்றார்.

ஆனால் அப்பெண்ணோ ''பரவாயில்லை'' என்று கூறி, அவரைப் பிடித்து உட்கார வைத்துவிட்டாள். அடுத்த நிறுத்தத்திலும் அதே மாதிரி நடந்தது. அதையடுத்து, தொடர்ந்து இரண்டு நிறுத்தங்களில் அவர் எழுந்திருப்பதும், அப்பெண் அவரை உட்காரச் சொல்லி வற்புறுத்துவதுமாக இருந்தது.

கடைசியில் கிழவருக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்னம்மா நீ? இப்படி என்னை எழுந்திருக்கவிடாமல் செய்தால் நான் எங்கே தான் இறங்குவது..?'' என்று சீறினார்.

— தஞ்சை பழ. வள்ளியப்பன்

என்ன நடக்குமோ?

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா —

ஐந்து பூனைக் குட்டிகள்
அணி வகுத்துச் சென்றன;
வெய்யில் கொளுத்தும் வேளையில்
வேக மாகப் போயின.

கடுக டுத்த முகத்துடன்
காலை எட்டிப் போட்டன
படை யெடுக்கும் வீரர்போல்
பாய்ந்து பாய்ந்து சென்றன.

கண்கள் இரண்டும் சிவக்கவே
காது நிமிர்ந்து நிற்கவே
என்ன கோபம், கோபமோ?
எங்கு அவைகள் போகுமோ?

சீன வெடியைக் கொளுத்தியே
சின்னப் பூனைக் குட்டிமேல்
சீனு போட்டு விட்டதால்
தேம்பித் தேம்பி அழுததாம்

அண்ணன் மாரி டத்திலே
அழுது கொண்டே சென்றதாம்
கண்ணீர் வழிய நடந்ததைக்
கலக்கத் தோடே சொன்னதாம்

கேட்ட வுடனே அண்ணன்மார்
கிளம்பி விட்டார் சீனுவின்
வீட்டைத் தேடிச் செல்கிறார்
மேலே என்ன நடக்குமோ

நன்றி: ''கல்கி'' தீபாவளி மலர் 1957

உங்கள் குரல்

நம்மினத்துப் பெரியவர்களின் பெருமைகளைக் ''குரல்'' மூலம் வெளிப்படுத்தும் திரு. ''எல்லெஸ்'' அவர்களின் சிறப்பான பணி தொடரட்டும். இராம. சுப்பையா அவர்களின் பேட்டியில் அவர்களது துணைவியார் அந்தக் காலத்திலேயே அரசியலில் ஈடுபட்டது தெரிய வருகிறது. அவர்களது தைரியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

முனைவர் தமிழண்ணல் ஐயா அவர்களின் செட்டும் சிக்கனமும் முனைவர் சுப. அண்ணாமலை ஐயா அவர்களின் பெண், வாழப் பிறந்தவள் கட்டுரைகள் ''நகரத்தார் குர'' லுக்குப் பெருமை சேர்க்கின்றன. மதுரை நகர விடுதி கட்ட பாகனேரி வே. மா. அவர்களின் நன்கொடையும் காட்டும் ஆர்வமும் பாகனேரி மண்ணுக்கே பெருமை.

அண. சரோஜா
பாகனேரி

'நகரம்' இனத்தைச் சேர்ந்த நாம், பிற்பட்டவர்தான் என்பதை ஆதாரங்களோடு திரு. இராம. ஆவிச்சி அழகுற எழுதியுள்ளார். அவருக்கு நமது பாராட்டுக்கள்.

இராம. வ. இராமசாமி
கோட்டையூர்

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 'நகரம்' என்ற தலைப்பில் நம் சமூகம் இடம் பெற்றிருந்தும் அரசின் சலுகைகள் நமக்குக் கிடைக்கவில்லை. இச் சலுகைகளைப் பெறுவதற்கு நம் சமூகப் பெரியவர்கள் முழு முயற்சி மேற்



கண்டவராயன்பட்டி குப. சி. சொ. சுப. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் கண்ணப்பன் D. E. E க்கும் இராயவரம் ராம. சே. உலகநாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சோலைக்கும் 29-1-90 அன்று இராயவரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கொள்ள வேண்டும்.

ஆர்எம். நாகப்பன்
கோட்டையூர்

நம் சமூகத்தினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநாடு நடத்தி நகரம் என்ற வகையில் பிற்பட்டோருக்கான சலுகைகளை நாம் பெறுவது, நம் சமூகச் சங்கங்களை 'நகரச் சங்கம்' எனப் பெயர் மாற்றம் செய்வது உட்பட பல நல்ல, பயனுள்ள தீர்மானங்களை நிறைவேற்றி நம் சமூகம் முன்னேற ஆவன செய்தால் நல்லது. சிந்திப்பார்களா?

கே. லெட்சுமணன்
கடியாபட்டி

பிப்ரவரி' 90 ''நகரத்தார் குரல்'' இதழில் வெளிவந்துள்ள 'நகரம்' பற்றிய கட்டுரையைப் பற்றிப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். வரும் கல்வி யாண்டிலாவது நகரத்தார் இன மாணவர்கட்கு பிற்பட்ட இன உதவி கிடைக்கட்டும்.

கூரைக் குடிசையில் வாழ்ந்து கொண்டு ஹோண்டா பைக்கில் வந்து தொழில் நடத்தும் பிற இனத்தவரையும் பாருங்கள். மாதம் முன்னூறு ரூபாய் சம்பளத்தில் வயிறு கழுவும் செட்டிமாரையும் பாருங்கள். எத்தனை ஜென்மம் எடுத்து கரடியாய்க் கத்தினாலும் ஆயுள் முழுவதும் உலக இன்பங்களைப் பார்ப்பதோடு வாழ்க்கையை முடிக்கத் தான் நம் சமூகம் தூண்டும். அரைக் காசையும் அனுபவிக்க விடாத சிக்கனத்தார் செட்டி நாட்டு நகரத்தார்.

எம். அருணாசலம்
கோனாபட்டு

பிப்' 90 இதழ் சிறப்பாக உள்ளது. ''குரல்'' வந்தால் தான் நம் செட்டி நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

ஏ. முத்துராமன்
திருச்சூர்

பிப்' 90 இதழில் வெளிவந்துள்ள இராம. சுப்பையா அவர்களின் பேட்டிக் கட்டுரை சிறப்பாக உள்ளது. படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டுகிறது. நம்மவர்களைப் பெருமைப்படுத்தும் ''நகரத்தார் குரல்'' வாழ்க; வளர்க!

எஸ்பி. இராமநாதன்
புதுக்கோட்டை

''நகரத்தார் குர''லின் வடிவமைப்பு அச்சு, செய்திகள், கட்டுரைகள், படங்கள் மற்ற நகரத்தார் இதழ்களிலிருநது மாறுபட்டு சிறப்பாக இருக்கிறது. படிப்பதற்கு ஆவலைத் தூண்டுகிறது.

எஸ். சந்திரன்
தேவகோட்டை

பிப்' 90 இதழில் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் எழுதியுள்ள 'எனது வெளி நாட்டு அனுபவங்கள்' கட்டுரையைப் படித்தபோது நானும் வெளிநாடு சென்று வந்த உணர்வு ஏற்பட்டது. ஸ்காட்லாண்டு அரண்மனையில் வெளி நாட்டினர் காமிராவும் கையுமாகக் காட்சியளிக்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார்கள் ஆனால் நம் இந்தியாவில் புராதனச் சின்னங்களைச் சுற்றிப் பார்க்கச் செல்கையில் நுழைவு வாயிலிலேயே காமிரா, பை முதலியவற்றை வாங்கி வைத்துக் கொண்டு வெறும் கையுடன் அனுப்புகின்றனர்.

நா. சுப. லெட்சுமணன்
உலகம்பட்டி

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்கள்

திருச்சி நகரத்தார் சங்கம் 14-9-1972 முதல் 30-1-1985 வரை, திருச்சியில் தனித் தனியாக நம்மவர்களில் 19 திருமணங்களை நடத்தி வைத்துள்ளது. அதுபோல நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் 24-11-1985 முதல் 7-9-1989 வரை 45 திருமணங்களை நடத்தி வைத்து நகரத்தார் வரலாற்றில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிள்ளையார்பட்டியில் 29-1-90 திங்கட்கிழமையன்று மேலும் 5 கூட்டுத் திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

வேகுப்பட்டி திரு. மு. திருநாவுக்கரசு செட்டியாரின் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் பூலாங்குறிச்சி திரு. ராம. வள்ளியப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் வள்ளியப்பனுக்கும்—

கண்டவராயன்பட்டி திரு. சித. சுப. அழ. சேதுச்செட்டியாரின் புதல்வி செல்வி நாச்சம்மைக்கும் வலையபட்டி திரு. வ. ராம. மு. சேதுராமன் செட்டியாரின் புதல்வன் செல்வன் சுப்பையா (B. Com) க்கும்—

தேவகோட்டை திரு. சிவ. இராமநாதன் செட்டியாரின் புதல்விசெல்வி நித்தியகல்யாணிக்கும் தேவகோட்டை திரு. கு. அழ. கரு. அழ. ரெங்கநாதன் செட்டியாரின் புதல்வன் செல்வன் அண்ணாமலைக்கும்—

நாட்டரசன்கோட்டை திரு. கண. க. ராம. கதிரேசன் செட்டியார் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் சொக்கநாதபுரம் திரு. மு. கண்ணப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் சீனிவாசனுக்கும்—

ஆத்தங்குடி திரு. பழ. வீர. கணேசன் செட்டியாரின் புதல்வி



பிள்ளையார்பட்டியில் 29-1-90 அன்று நிகழ்ந்த கூட்டுத் திருமணங்களின் போது எடுத்த படம். படத்தில் ஐந்து மணமக்களையும் காணலாம்.

செல்வி அழகம்மைக்கும் தேவ கோட்டை திரு. செ. பழநியப்ப செட்டியாரின் புதல்வன் செல் வன் ஏகப்பனுக்கும்—

ஆக 5கூட்டுத் திருமணங்கள் காலை மணி 9-30க்கு மேல் 10-30க்குள் சிறப்பாக நிகழ்ந் தன. திருமண விழாவிற்கு மதுரை வங்கியின் தலைவர் சுப. சபாபதி அவர்களும் மற்றும் பல முக்கியஸ்தர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தனர். அனைவருக்கும் காலைப் பலகாரமும் பகல் உண வும் வழங்கப் பெற்றது.

திருமண ஏற்பாடுகளை திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. எஸ்பி. அருணாசலம் அவர் களும் மற்றும் நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் நிர்வாகிகளின் துணைவியார்களும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

இந்த ஐந்து திருமணங்களுக் கும் ரூ. 75,000/- செலவு ஏற் படும் எனத் தெரிவிக்கப் பெற் றது.

NOTICE

Form IV

(See Rule 8)

Statement of ownership and other particulars about "NAGARATHAR KURAL" Monthly, Madurai.

1. Place of Publication: 25, North Chitrai St., Madurai-625001
2. Periodicity of its Publication : Monthly
3. Printer's Name : A. Palaniappan
   Nationality : Indian
   Address : Expo Printers, 20, Krishnapuram 4th Cross Street, Madurai-625 009.
4. Name of Editor : V. N. Chidambaram
   Nationality : Indian
   Address : 21, Kamala 2nd Street, Chinna Chokkulam, Madurai-625 002
5. Name and address of Publisher & Owner : SP. A. Nadarajan, Plot No. 377, Anna Nagar, Madurai-625 020

I. SP. A. Nadarajan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 28—2—90

(Sd) SP. A. Nadarajan
PUBLISHER

மருத்துவமனையில் ஒரு நாள்...

'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள் மதுரையில் மருத்துவ மனையில் இருந்த போது இறுதி மூன்று நாட்களிலும் மயக்க நிலையிலேயே இருந்தார்கள். அவர்கள் உற்றார், உறவினரைப் பற்றிச் சிந்திக்காமல் 'குழந்தைக் கவிஞர்' எனும் பட்டத்துக்கேற்பக் குழந்தைகளைப் பற்றியே சிந்தித்தார்கள். படுக்கையில் இருந்த போதும், அவர்களின் வலதுகை பேனாப் பிடித்து எழுதுவது போன்ற பாவனையில் இருந்தது.

15-3-89 புதன் கிழமை காலை 9 மணியளவில் மருத்துவர் பரிசோதனை செய்து கொண்டிருந்தபோது, சென்னை ''கல்கி'' நிறுவனத்திலிருந்து குழந்தைக் கவிஞரின் உடல் நலம் பற்றி அறிய ஒரு நண்பர் வந்திருந்தார். அவர் மருத்துவரின் அனுமதி பெற்று அறையினுள் வந்தார்.



உடனே மருத்துவர் ''மிஸ்டர் வள்ளியப்பா உங்களைக் காண சென்னையிலிருந்து ஒரு நண்பர் வந்துள்ளார். அவர் யாரென்று சொல்லுங்கள்'' என்றார். வள்ளியப்பா அவர்கள் விழித்துப் பார்த்து ''கோகுலம்'' பத்திரிகையின் விளம்பரப் பிரிவுப் பொறுப்பாளர் ராஜகோபால்'' என்றார்கள். மேலும் ''இந்த இதழ் கோகுலத்தைத் தாமதமின்றி வெளிவரச் செய்யுங்கள்'' என்றதோடு ''எனக்குச் சென்னையில் பல வேலைகள் இருக்கின்றன. ஆனால் என்னை இங்கே படுக்கையில் படுக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றும் அந்த நண்பரிடம் கூறினார்கள்.

மருத்துவர் வியப்படைந்து ''இவர் ஒரு இலட்சிய மனிதர். மயக்க நிலையிலேயும் தன்னுடைய கடமை, பணிகள் குறித்த சிந்தனையில் உள்ளார். இவரால் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காகவே இவர் பிழைத்து விடுவார்'' என்று கூறினார். உறவினர்களாகிய நாங்களும் வெகு நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால் அதற்கடுத்த நாள் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வள்ளியப்பா அவர்கள் அமர்த்துவம் பெற்றார்கள்.

குழந்தைப் பிரியரான நேரு மாமாவின் நூற்றாண்டு விழாவை மிகப் பெரிய அளவில் கொண்டாடத் திட்டமிட்டிருந்தார்கள். இறைவன் கருணை இருந்திருந்தால் இந்த ஓராண்டிற்குள் அவர்கள் எத்தனையோ பணிகளை குழந்தைகளின் நலனுக்காகச் செய்திருப்பார்கள்.

— சே. நா.

ஃ குழந்தைக் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றை டாக்டர் திரு. பூவண்ணன் ''குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வரலாறு'' என்ற தலைப்பில் எழுதி குழந்தைக் கவிஞரின் மணி விழாவின் போது நூலாக வெளியிட்டுள்ளார்.

ஃ அழ. வள்ளியப்பா அவர்களுக்குக் 'குழந்தைக் கவிஞர்' என்னும் பட்டப் பெயரைச் சூட்டியவர் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. தமிழ்வாணன்.

குழந்தைக் கவிஞருக்கு அஞ்சலி

கவிஞர் ரா. பொன்ராசன்

''ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார் -''

என்று சொல்லிச் சொல்லியே
இளைய தலை முறையினை
என்றும் ஊக்கி வளர்த்தவர்
இனிய குழந்தைக் கவிஞராம்

குழந்தைகட்கு மட்டுமே
இலக்கியங்கள் படைப்பதை
குறிக் கோளாக்கிச் சிறந்தவர்
குழந்தைக் கவிஞர் மட்டுமே!

மனித நேயம் என்பதன்
மறு உருவாய்த் திகழ்ந்தவர்
மனதினாலே குழந்தையாய்
வாழ்க்கை முழுக்க இருந்தவர்!

தாமே ஒரு குழந்தையாய்
தாமே ஒரு தலைவராய்ச்
தாமே ஓர் இயக்கமாய்
காலம் முற்றும் வாழ்ந்தவர்!

வானிருந்தும் நம்மையே
வாழ்த்தி நிற்கும் கவிஞரை,
வாழ்த்தி நாமும் வணங்கினால்
வாழ்க்கை நாளும் சிறக்குமே

(காமராசர் மாவட்டம் முத்துராமலிங்கபுரத்தில் 16-4-89 அன்று நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கவிஞர் திரு. ரா. பொன்ராசன் பாடிய கவிதை.)

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

Regd. No. TN/MA/(C(/106 NAGARATHAR KURAL